# மாணவர் சூழல் வாசகம்



## இரண்டாம் வகுப்பு

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தக சாலை
யாழ்ப்பாணம்

# மாணவர் சூழல் வாசகம்

## இரண்டாம் வகுப்பு

★

[வித்தியாபகுதியாரின் புதிய பாடவிதானத்துக்கு அமைய எழுதப்பட்டுக் கல்வி அமைச்சின் 178 ஆம் இலக்கச் சுற்று நிருபத்துக்கு அமயத் திருத்தி எழுதப்பட்டது.]

★

நூலாசிரியர்
க. சி. குலரத்தினம்.



பதிப்பாளர்
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

திருத்திய நான்காம் பதிப்பு : 1975 தை.

Printed by Mr. Arumugam Subramaniam at Sri Subramania
Printing Works, 63, B. A. Thamby Lane, Jaffna,
& Published by
Mr. Arumugam Subramaniam, Sri Subramania
Book Depot, 235, K. K. S. Road, Jaffna.

பதிப்புரிமை]

[விலை ரூபா 3—00

# பதிப்புரை

வித்தியாபகுதியார் தயாரித்து வெளியிட்ட சூழற்பாட விதானத்துக்கமைய இந்நூல் இரண்டாம் வகுப்பு மாண வருக்காக எழுதப்பட்டது. முன்னர் ஆசிரிய சங்கங்களின் பாடவிதானத்துக்கு அமைய மாணவர் சூழல் வாசகங்களை வெளியிட்ட நாம் இப்போது அரசாங்கத்தின் புதிய பாடத்திட்டத்தை ஏற்று அதற்கமையவும் கல்வி, அமைச் சின் 178 ஆம் இலக்கச் சுற்று நிருபத்துக்கு அமையவும் இதனைத் தயாரித்துப் புதிதாக வெளியிடுகிறோம்.

முன்னர் நாம் வெளியிட்ட நூல்களுக்குப் பேராதர வளித்த ஆசிரியப் பெரியார்கள், இப்புதிய நூலையும் ஏற்று ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஆசிரியர் இந் நூலில் உள்ள குறைகளை எமக்குத் தயவுசெய்து அறிவிப் பார்களாயின் நாம் மிகுந்த நன்றியறிதலுடன் அவர்கள் ஆலோசனைப்படி திருத்தி அமைத்துப் பதித்து மாணவரின் தேவையை நல்லமுறையில் நிறைவு செய்வோம்.

வணக்கம்

யாழ்ப்பாணம்
5—1—75

பதிப்பாளர்

# பொருளடக்கம்


| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அ. | எங்கள் நாடு | 1 |
| | ஆ. | தமிழர் | 2 |
| | இ. | சிங்களவர் | 3 |
| | ஈ. | முஸ்லிம்கள் | 4 |
| | உ. | வேடர் | 6 |
| | ஊ. | இந்தியத்தமிழர் | 7 |
| 2. | அ. | எஸ்கிமோஸ் சாதியினர் | 9 |
| | ஆ. | செவ்விந்தியர் | 11 |
| | இ. | பிக்மீஸ் சாதியினர் | 12 |
| | ஈ. | அராபியர் | 13 |
| | உ. | சுவிற்சலாந்து மக்கள் | 15 |
| | ஊ. | யப்பானியர் | 16 |
| | எ. | அமெரிக்கர் | 17 |
| | ஏ. | ஐரோப்பியர் | 19 |
| 3. | அ. | தொழில்கள் | 21 |
| | ஆ. | கமஞ்செய்வோர் | 23 |
| | இ. | உழவர் வாழ்க | 24 |
| | ஈ. | மட்பாண்டஞ் செய்வோர் | 24 |
| | உ. | மரவேலை செய்வோர் | 26 |
| | ஊ. | இரும்புவேலை செய்வோர் | 27 |
| | எ. | வியாபாரஞ் செய்வோர் | 29 |
| | ஏ. | மீன் பிடிப்போர் | 31 |
| 4. | அ. | ஆசிரியர் | 33 |
| | ஆ. | வைத்தியர் | 35 |
| | இ. | பொலிசுக்காரர் | 36 |
| | ஈ. | தபாற்காரர் | 38 |
| 5. | அ. | எமது வீடு | 39 |
| | ஆ. | எழுத்தின் கதை | 42 |
| | இ. | நெருப்பின் கதை | 43 |
| | ஈ. | வண்டி வாகனம் | 46 |
| | உ. | நமது ஆடைகள் | 50 |

| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| | ஊ. | இலங்கையின் பழைய நகரங்கள் ... ... | 52 |
| | எ. | நாகரிகம் வாய்ந்த நாடுகள் ... ... | 58 |
| | ஏ. | எங்கள் அரசாங்கம் ... ... ... | 61 |
| 6. | அ | நல்ல பிள்ளை ... ... ... | 64 |
| | ஆ. | மரியாதைப் பழக்கம் ... ... ... | 64 |
| | இ. | நல்லன செய் ... ... ... | 65 |
| | ஈ. | நல்ல பழக்கம் ... ... ... | 65 |
| | உ. | நல்ல ஒழுக்கம் ... ... ... | 66 |
| | ஊ. | சுகாதாரப் பழக்கம் ... ... ... | 67 |
| | எ. | சுகவாழ்வு ... ... ... | 67 |
| | ஏ. | தேகாப்பியாசமும் நித்திரையும் ... ... | 69 |
| 7. | அ | குதிரை ... ... ... | 70 |
| | ஆ. | கழுதை ... ... ... | 72 |
| | இ. | எருமை ... ... ... | 73 |
| | ஈ. | யானை ... ... ... | 74 |
| | உ. | அணில் ... ... ... | 75 |
| | ஊ. | வெளவால் ... ... ... | 76 |
| 8. | அ. | ஆந்தை ... ... ... | 77 |
| | ஆ. | மரங்கொத்தி ... ... ... | 78 |
| | இ. | வாத்து ... ... ... | 79 |
| | ஈ. | மீன்கொத்தி ... ... ... | 80 |
| | உ. | வண்ணத்துப் பூச்சி ... ... ... | 81 |
| | ஊ. | தேனீக்கள் ... ... ... | 82 |
| 9. | அ | இயற்கையின் அற்புதம்... ... ... | 83 |
| | ஆ. | சந்திரன் ... ... ... | 83 |
| | இ. | வானவில் ... ... ... | 84 |
| | ஈ. | மழை பெய்தல் ... ... ... | 85 |
| | உ. | கருங்கடல் ... ... ... | 85 |
| | ஊ. | தாவரம் ... ... ... | 86 |
| | எ. | மா மரம் ... ... ... | 87 |
| | ஏ. | பலாமரம் ... ... ... | 88 |
| | ஐ. | நீரில் உண்டாகும் கொடிகள் ... ... | 90 |





சேர் பொன். இராமநாதன்　　　　சேர். பொன். அருணுசலம்

புகழ்பெற்ற சகோதரர் இருவர்

# மாணவர் தமிழ் வாசகம்

பாடம் ஒன்று.

## (அ) எங்கள் நாடு.

எங்கள் நாடு இலங்கை. இதற்கு ஈழம் என்றும் பெயர். இலங்கை மாங்காய் வடிவம் உள்ள தீவு.

இலங்கையைச் சூழ இந்து சமுத்திரம் உள்ளது. இலங்கைக்கு வடக்கே இந்தியா தேசம் உள்ளது. அதற்குப் பாரத நாடு என்றும் பெயர்.

இலங்கை அழகான நாடு. இங்கே ஆறுகள், மலைகள், சோலைகள் உண்டு.

இலங்கையில் தமிழர், சிங்களவர், இந்தியர், முஸ்லிம்கள், பறங்கியர் வாழுகிறார்கள்.

இலங்கையில் ஒன்பது மாகாணப் பிரிவுகள் உள்ளன. யாழ்ப்பாணம் வடமாகாணத்தில் உள்ளது. மட்டக்களப்பு கீழ்மாகாணத்தில் உள்ளது. கண்டி மத்திய மாகாணத்தில் உள்ளது. கொழும்பு மேல் மாகாணத்தில் உள்ளது. இலங்கையின் தலைநகரம் கொழும்பு.

## (ஆ) தமிழர்

தமிழர் தமிழ்மொழியைப் பேசுவர். தமிழ் இனிமையான மொழி. அதற்குச் செந்தமிழ், பசுந்தமிழ் என்றும் பெயர்கள் உண்டு.



தமிழர்

தமிழர் வடமாகாணம், கீழ்மாகாணம், மத்திய மாகாணம், மேல்மாகாணம் ஆகிய இடங்களில் வசிக்கிறார்கள். தமிழர் பலதொழில்களைச் செய்கிறார்கள்.

தமிழரின் சமயம் சைவசமயம். அவர்கள் சிவபெருமானை வழி படுவர். தமிழரில் சிலர் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்து இருக்கிறார்கள்.



கோயில்

சைவ சமயத்தவர் தைப்பொங்கல், சிவ ராத்திரி, வருடப்பிறப்பு, தீபாவலி முதலிய தினங்களைக் கொண்டாடுவர். கிறிஸ்தவர் நத்தார், பெரியவெள்ளி ஆகிய திருநாள்களைக் கொண்டாடுவர்.

## (இ) சிங்களவர்

சிங்களவர் சிங்கள மொழியைப் பேசுவர். இலங்கையில் சிங்களவரின் தொகை அதிகம். அவர்கள் கண்டி, கம்பளை, பதுளை, காலி, மாத்தறை, களுத்துறை முதலிய இடங்களில் வசிக்கிறார்கள்.

சிங்களவரில் பலர் புத்த சமயத்தவர். சிலர் கிறிஸ்தவ சமயத்தவர். புத்த சமயத்தவர் வழிபடும் இடம் விகாரை. அவர்கள் பூரணை நாள்களைக் கொண்டாடுவர்.



சிங்களவர்.

சிங்களவர் கமஞ்செய்தல், மீன்பிடித்தல், கயிறு திரித்தல், பாய் இழைத்தல் முதலிய வேலைகளைச் செய்வர்.

## (ஈ) முஸ்லிம்கள்.

முஸ்லிம்கள் தமிழ் மொழியைப் பேசுவர். அவர்கள் இஸ்லாம் சமயத்தவர். அவர்கள் ஆண்டவனை அல்லா என்று கூறுவர். அவர்கள் பள்ளிவாசல் என்னும் கோயிலில் வணங்குவார்கள். அவர்களின் சமயநூல் குர்ஆன்.



முஸ்லிம்கள்.

முஸ்லிம்கள் மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், புத்தளம், கம்பளை முதலிய இடங்களில் வசிக்கிறார்கள். அவர்கள் நபிகள் பிறந்ததினம், றம்ழான், கச்சுப்பெருநாள் முதலிய தினங்களைக் கொண்டாடுவர்.



பள்ளிவாசல்

## (உ) வேடர்.

வேடர் முற்காலத்தில் காடுகளில் வசித்தனர். அவர்கள் இக்காலத்தில் சீர்திருத்தம் அடைந்து வருகிறார்கள். அவர்கள் காட்டை வெட்டிக் கமஞ் செய்கிறார்கள். அவர்கள் வேட்டைக்குப் போவார்கள். அவர்களிடம் வேட்டை நாய்கள் உண்டு. அவை மிருகங்களைத் துரத்திப்பிடிக்கும்.



வேடர்

## விந்தனை வேடர்.

1. விந்த னையாங் காட்டுக்குள்ளே
வீடு செய்திடு வோம் — இலையால்
வேய்ந் திருந்திடு வோம் — குகைக்குள்
விழைந் துறைந்திடு வோம்

2. வில்லெ டுத்தே மான் மரைகள்
வேட்டை செய்திடு வோம் — நெருப்பில்
வேக வைத்திடு வோம் — நன்றாக
மென்று தின்றிடு வோம்

3. கொல்லை செய்தே தினை விதைப்போம்
குரக்கன் வித்திடு வோம் — அவற்றைக்
குற்றி யாக்கிடு வோம் — ஒன்றாகக்
குழைத்துத் தின் றிடுவோம்

4. உடுப்ப தின்றி முன்னை நாளில்
உலவி வந்தன மே இந்நாளில்
உடை யணிந்தன மே — கல்வி
ஓதி நின்றன மே.

*— முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி*

# (ஊ) இந்தியத் தமிழர்.

இந்தியா ஒரு பெரிய தேசம். அதன் தென்பகுதி தமிழ் நாடு எனப்படும். அங்கே மதுரை, திருச்சி, சேலம் முதலிய பெரிய நகரங்கள் உள்ளன. அங்கே தமிழர் வசிக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் இருந்து சில தமிழர் இலங்கைக்கு வந் தார்கள். அவர்கள் இலங்கையில் உள்ள தேயிலை, இறப்பர்த் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள்.



தேயிலை கிள்ளுதல்

இறப்பர் மரத்தில் பால் எடுத்தல்.



கண்டி, கம்பளை, பண்டாரவளை, நுவரெலியா, மாத்தளை, பதுளை முதலிய மலைநாடுகளில் தோட்டங்கள் உள்ளன. அங்கே தேயிலை, இறப்பர், கொக்கோ முதலிய பயிர்கள் உண்டாகின்றன.

இந்தியத் தமிழர் தேயிலை கிள்ளுதல், இறப்பர் மரத்தில் பால் எடுத்தல், தேங்காய் உரித்தல், தேங்காயை உடைத்துக் காயவிடுதல் ஆகிய பல வேலைகளைச் செய்கிறார்கள்.

## பாடம் இரண்டு

## பிறநாட்டு வாசிகள்

### (அ) எஸ்கிமோஸ் சாதியினர்

நாம் வாழும் பூமியின் வடபாகத்தில் துருவப்பகுதி உள்ளது. துருவப்பகுதி மிகவும் குளிரானது. அங்கே தண்ணீர் உறைந்து கட்டியாய் இருக்கும். அதனைப் பனிக்கட்டி என்பர். வெயில் எறிக்கும் காலத்தில் பனிக்கட்டி உருகும். துருவப்பகுதியில் எஸ்கிமோஸ், லாப்பியர் முதலிய மக்கள் வசிக்கிறார்கள்.

துருவப்பகுதியில் விறகு கிடைக்காது. எனவே எஸ்கிமோஸ் மீன், இறைச்சி உணவைப் பச்சையாகவே உண்பர். அவர்கள் பிராணிகளின் தோலை உடுப்பர்.

எஸ்கிமோஸ் கோடைகாலத்தில் கூடாரத்தில் வசிப்பர். அதற்குத் தூபக் என்று பெயர். மாரிகாலத்தில் அவர்கள் பனிக்கட்டியால் வீடுகட்டுவர். பனிவீடு இக்லூ எனப்படும்.

எஸ்கிமோஸ் கல்லால் செய்த விளக்கில் மீன் கொழுப்பை ஊற்றுவர். காய்ந்த பாசியைத் திரியாய் இடுவர். விளக்கில் குளிர்காய்வது அவர்கள் வழக்கம். அவர்கள் பனிக்கட்டியை உருக்கிப் பருகுவர்.

எஸ்கிமோஸ் எலும்புகளால் ஆயுதங்களைச் செய்வர். அவர்கள் துருவமான், நாய் ஆகிய மிருகங்களை வளர்ப்பர். சறுக்கு வண்டிகளில் மிருகங்களைப் பூட்டிச் சவாரி செய்வர்.



எஸ்கிமோஸ் கட்டிய பனிவீடு

## அப்பியாசம்

1. துருவப்பகுதி எங்கே உள்ளது ?
2. துருவப்பகுதி எப்படி இருக்கும் ?
3. தண்ணீர் உறைந்தால் என்னவாகும் ?
4. துருவப்பகுதியில் வசிப்பவர் யாவர் ?
5. அவர்கள் உணவு என்ன ?
6. அவர்கள் உணவை எப்படி உண்பர் ?
7. அவர்களின் ஆயுதங்கள் எதனுல் ஆனவை ?
8. எஸ்கிமோஸ் வளர்க்கும் மிருகங்கள் எவை ?

## (ஆ) செவ்விந்தியர்

வட அமெரிக்கா ஒருபெரிய தேசம். அங்கே புல்வெளிகள் உண்டு. புல்வெளிகளில் செவ்விந்தியர் வசிக்கிறார்கள். அவர்கள் தங்கள் முகத்தில் சிவப்பு மை பூசுவது வழக்கம்.



செவ்விந்தியர்

செவ்விந்தியர் வாழும் இடங்களில் காட்டுமாடுகள் உண்டு. அவை மூர்க்கம் உள்ளவை. அவை கூட்டம் கூட்டமாய் வாழும்.

செவ்விந்தியர் காட்டு மாடுகளைப் பிடிப்பார்கள். அவற்றின் இறைச்சி, தோல் ஆகியவற்றை எடுப்பார்கள். மாட்டுத்தோலினால் உடைகளைச் செய்வார்கள்.

செவ்விந்தியப் பெண்கள் ஓயாது வேலை செய்வர். அவர்கள் மரத்தினால் கரண்டி, கிண்ணம், மரவை, தட்டம் முதலிய பொருள்களைச் செய்வர்.

செவ்விந்தியர் இடம் பெயர்ந்து திரிவதில் விருப்பம் உள்ளவர். ஆகவே அவர்கள் வீடுகள் கட்டுவது இல்லை. அவர்கள் கூடாரங்களில் வசிப்பார்கள். அவர்களின் கூடாரம் விக்வாம் எனப்படும்.

செவ்விந்தியர் குதிரைகளை அன்புடன் வளர்ப்பர். அவர்கள் குதிரைச்சவாரி செய்வதில் விருப்பம் உள்ளவர். அவர்கள் நாட்டியம் ஆடுவதிலும் விருப்பம் உள்ளவர்கள்.

## அப்பியாசம்

விடை எழுதுக.

1. செவ்விந்தியர் மரத்தினால் செய்யும் பொருள்கள் எவை?
2. அவர்கள் ஏன் வீடு கட்டுவது இல்லை?
3. அவர்களின் கூடாரத்துக்கு என்ன பெயர்?
4. அவர்கள் எதில் விருப்பம் உள்ளவர்கள்?
5. அவர்கள் வளர்க்கும் மிருகம் எது?

## (இ) பிக்மீஸ் சாதியினர்.

ஆபிரிக்கா ஒருபெரிய கண்டம். அங்கே கொங்கோ ஆறு பாய்கிறது. கொங்கோ ஆற்றின் கரையில் காடுகள் உள்ளன. அக்காடுகளில் கொடிய மிருகங்கள் உலாவித் திரியும். அங்கே பிக்மீஸ் என்னும் குள்ளர் வசிக்கிறார்கள்.

பிக்மீஸ் மூன்று அடி உயரம் உள்ளவர். அவர்கள் வலிமை உள்ளவர். காட்டுமரத்தைத் தறித்துக் குடிசைகட்டுவர்.

குடிசை இலை தழைகளால் வேய்கிறார்கள். காட்டு மிருகங்கள் குடிசைக்கு அருகில் வராமல் மரக்குற்றிகளை நாட்டி வேலி அடைப்பர்.

பிக்மீஸ் மக்கள் இலைகள், மரப்பட்டை, தோல் ஆகிய வற்றை அணிவர். அவர்கள் அம்பு எய்வதில் கெட்டிக்காரர். அவர்கள் மரப்பல்லி, யானை முதலிய மிருகங்களைக்கொன்று தின்பர். அவர்களுக்கு வாழைப்பழம் தின்பதில் விருப்பம் அதிகம். அவர்கள் கிழங்கு தோண்டி எடுப்பார்கள். கூட்டங் கூட்டமாய் நின்று நாட்டியம் ஆடுவார்கள்.

## அப்பியாசம்

கீறு உள்ள இடங்களில் சொற்களைச் சேர்த்து வாசி.

1. ஆபிரிக்காவில் .................... ஆறு பாய்கிறது.
2. .................. ஆற்றங்கரையில் .............. உள்ளன.
3. பிக்மீஸ் .............. அடி .............. உள்ளவர்.
4. பிக்மீஸ் .................... தின்பதில் .............. உள்ளவர்.
5. அவர்கள் .................... தோண்டி ..................
6. அவர்கள் .......................... ஆடுவர்.

## பாலைநில வாசிகள்

### (அ) அராபியர்

ஆபிரிக்காவின் வடக்குப் பாகத்தில் ஒரு பாலைவனம் உண்டு. அதற்குச் சகாரா என்றும் பெயர். பாலைவனத்தில் புல், பூண்டு, மரம் ஆகியவை முளைக்கமாட்டா. எங்கும் மணல் நிறைந்து இருக்கும் அங்கே வெயில் அதிகமாய் எறிக்கும். அங்கே மழை பெய்வது இல்லை.

பாலைவனத்தில் சில இடங்கள் பசுமையாய் இருக்கும். அங்கே பேரீந்து மரம் உண்டாகும். அந்த இடத்துக்குப் பாலைநிலப் பசுந்தரை என்று பெயர்.

பாலைநிலப் பசுந்தரையில் மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் வனாந்தர வாசிகள். அவர்களுள் அராபியரும் ஒருவர்.

அராபியர் கூட்டங் கூட்டமாய் வசிப்பர். அவர்கள் கூடாரம் அமைத்து ஓரிடத்தில் வாழ்வர். அங்கே ஆடு, ஒட்டகம் ஆகிய மிருகங்களை வளர்ப்பர். அந்த இடத்தில் உள்ள புல் முடிந்த பின் வேறு இடத்துக்குப் போவார்கள். அவர்கள் ஒட்டகத்தில் ஏறிப் போவார்கள். ஒட்டகத்தின் கால்கள் மணலில் புதைய மாட்டா.

சில பசுந்தரைகள் பெரியவை. அங்கே அராபியர் வீடு கட்டி வாழ்வர். அவர்கள் களிமண்ணால் வீடுகட்டுவர் பேரீந்து ஓலையால் அவற்றை வேய்கிறார்கள்.

அராபியர் களிமண்ணால் பானை, சட்டி முதலிய பாண்டங்கள் செய்வர். பேரீந்தின் ஓலையால் பாய், கடகம், பெட்டி, முடைவர். அவர்கள் பேரீச்சம் பழத்தையும், ஒட்டகத்தின் பாலையும் உண்பர். அராபியர் இஸ்லாம் சமயத்தவர்.

## அப்பியாசம்

விடை எழுதுக.

1. பாலைவனம் எங்கே உள்ளது ?
2. அந்தப் பாலைவனத்தின் பெயர் என்ன ?
3. அராபியர் வளர்க்கும் மிருகங்கள் எவை ?
4. பாலைவனத்தில் நடக்கக் கூடிய மிருகம் எது?
5. அராபியரின் உணவுகள் எவை ?
6. அவர்கள் பேரீந்தின் ஓலையால் என்ன செய்வர் ?
7. அராபியரின் சமயம் என்ன ?

## (உ) சுவிற்சலாந்து மக்கள்

ஐரோப்பாக் கண்டத்தில் பலநாடுகள் உண்டு. அவற்றுள் சுவிற்சலாந்து என்னும் நாடும் ஒன்று. சுவிற்சலாந்து ஒரு மலைநாடு. அது மிகவும் அழகு உள்ள நாடு.

சுவிற்சலாந்து மக்கள் சுறுசுறுப்பு உள்ளவர். அவர்கள் அதிகாலையில் நித்திரைவிட்டு எழும்புவர். பகலில் ஓயாது வேலை செய்வார்கள். சிலர் கமஞ் செய்கிறார்கள். சிலர் ஆடு மாடுகளை மேய்க்கிறார்கள். அவர்களின் பசுக்கள் அதிக பால் தருவன. சுவிற்சலாந்து மக்கள் பசுப்பாலைத் தகரங்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்புவர். அந்தப்பால் ரின் பால் எனப்படும்.

சுவிற்சலாந்து மக்கள் மணிக்கூடு, கைக்கடிகாரம், இசைக்கருவி, இயந்திரம் ஆகியவற்றைச் செய்கிறார்கள். அவர்கள் ஆட்டின் மயிரால் அழகிய ஆடைகள் செய்வர்.

சுவிற்சலாந்து மக்கள் அழகிய வீடுகளைக் கட்டுவர். அவர்கள் பால் வெண்ணெய், பாற்கட்டி, இறைச்சி, பழங்கள் ஆகியவற்றை உண்பர்.

சுவிற்சலாந்தில் குளிர் அதிகம். ஆகவே அவர்கள் கம்பளி ஆடைகளை அணிகிறார்கள். அவர்கள் சமாதானமாக வாழ விரும்புவர் ஆகவே அவர்கள் பிறநாட்டவரோடு சண்டை செய்வது இல்லை.

### அப்பியாசம்

கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்து வாசிக்கவும்.

*1. ...................... — ஒரு மலைநாடு.*

2. அது .......................... கண்டத்தில் உள்ள நாடு.
3. சுவிற்சலாந்து மக்கள் ........................... உள்ளவர்.
4. சுவிற்சலாந்துப் பசுக்கள் ........................ தரும்.
5. சுவிற்சலாந்து மக்கள் .................................. உண்பர்.
6. அவர்கள் .................. ஆடையை அணிவர்.

## (ஊ) யப்பானியர்

ஆசியாக்கண்டம் மிகவும் பெரியது. அதன் கிழக்குப் பாகத்தில் சீனதேசம் உள்ளது. சீன ஒரு பெரிய நாடு. சீனவுக்குக் கிழக்கில் பலதீவுகள் உள்ளன. அத்தீவுகள் யப்பான் எனப்படும்.

யப்பானில் யப்பானியர் வசிக்கிறர்கள். அவர்கள் தங்கள் நாட்டை நிப்பன் என்று கூறுவர். யப்பான் தேசம் கிழக்கில் இருப்பதால் சூரிய உதயநாடு எனப்படும்.

யப்பான் தீவுகள் பசுபிக் சமுத்திரத்தில் உள்ளன. யப்பானில் எரிமலைகள் உள்ளன. அவை சிலசமயம் ஊரை அழிக்கும். யப்பானில் பூமி நடுங்கும். அதனல் யப்பானியர் பெரிய வீடுகள் கட்டுவது இல்லை.

யப்பானியர் அழகிய சிறிய வீடுகளைக் கட்டுவர். அவர்கள் பலகை, காகிதமட்டை முதலியவற்ருல் சுவர் அமைப்பர். அவர்கள் தங்கள் வீடுகளை அலங்கரித்து அழகாயும், சுத்தமாயும் வைத்திருப்பர்.

யப்பானியர் விருந்தினரை அன்புடன் உபசரிப்பர். அவர்கள் தங்கள் நாட்டிலே அன்பு உள்ளவர்கள். அவர்கள் கமம்

செய்வதில் கெட்டிக்காரர். அவர்கள் அதிக நெல் விளைவு செய்கிறார்கள். அவர்கள் ஆறுகளிலும் கடலிலும் மீன் பிடிப்பார்கள்.

யப்பானியர் விளையாட்டுப் பொருள்கள், இயந்திரங்கள், புடைவை, வானொலி, கடிகாரம் அதிகமாகச் செய்வர். அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பிப் பணம் பெறுவர். யப்பானியர் சுறுசுறுப்பு உள்ளவர்கள். யப்பானியரின் பிள்ளைகள் கல்வியில் அதிக விருப்பம் உள்ளவர்கள்.

## அப்பியாசம்

1. *யப்பான் எத்திசையில் உள்ளது ?*
2. *யப்பானைச் சூழ உள்ள சமுத்திரம் எது ?*
3. *யப்பானுக்கு அருகில் உள்ள பெரிய நாடு எது ?*
4. *சூரிய உதய நாடு என்பது எதனை ?*
5. *நிப்பன் எனப்படும் நாடு எது ?*
6. *பூமி நடுங்கினால் என்ன நடக்கும் ?*
7. *யப்பானியரின் தொழில்கள் எவை ?*
8. *யப்பானியரின் நல்ல குணங்கள் எவை ?*

## (எ) அமெரிக்கர்

அமெரிக்கா ஒரு பெரிய தேசம். அது அமெரிக்காக் கண்டத்தில் உள்ளது. அமெரிக்காக் கண்டம் மேற்குத் திசையில் உள்ளது. அமெரிக்காவின் தென்பாகம் தென் அமெரிக்கா எனப்படும். அமெரிக்காவின் வடக்கில் கனடா தேசம் உள்ளது.



ஆபிரகாம் லிங்கன்

அமெரிக்காவைப் புதிய உலகம் என்பர். அதன் கிழக்கில் அத்திலாந்திக் சமுத்திரம் உள்ளது. அதன் மேற்கில் பசுபிச் சமுத்திரம் உள்ளது.

அமெரிக்கா செல்வம் நிரம்பிய நாடு அங்கே கோதுமை: பருத்தி அதிகமாக உண்டாகும். அங்கே பழமரங்கள் அதிகம் உள்ளன. அங்கே ஆடு, மாடு, பன்றி கோழி பண்ணைகளில் வளருவன.

அமெரிக்காவில் மண் எண்ணெய், பெற்றோல், கிணறுகள் உள்ளன. அமெரிக்கர் புடைவை, மோட்டார்வண்டி, இயந்திரங்கள் விமானங்கள் அதிகமாகச் செய்கிறார்கள். அவர்கள் ஆங்கில மொழியைப் பேசுவர். அவர்கள் கிறிஸ்தவ சமயத்தவர்.

அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கன், கெனடி போன்ற பெரிய தலைவர்கள் இருந்தனர். ஆபிரகாம் லிங்கன் மகாத்மா காந்தியைப் போன்ற ஒரு பெரியவர்.

## அப்பியாசம்

கீறிட்ட இடங்களில் சொற்களைச் சேர்த்து வாசி

1. அமெரிக்கா ............... ... திசையில் உள்ளது.
2. அமெரிக்காவைப் ................. உலகம் என்பர்.

3. அமெரிக்கா ...................... நிரம்பிய ........................
4. அமெரிக்காவில் ...... ......... கிணறுகள் உண்டு.
5. அங்கே .. .................. ...... .......... என்பன விளையும்.

II. விடை எழுதுக.

1. அமெரிக்காவின் கிழக்கில் உள்ள சமுத்திரம் எது?
2. அதன் மேற்கில் உள்ள சமுத்திரம் எது?
3. ஆபிரகாம் லிங்கன் என்பவர் யாவர்?

## (ஏ) ஐரோப்பியர்

ஐரோப்பா ஒரு சிறிய கண்டம். அதிலே பல நாடுகள் உள்ளன. அவை பிரித்தானியா, பிரான்ஸ், ஒல்லாந்து, போத்துக்கல், பெல்சியம், இத்தாலி, யேமனி, நோர்வே, சுவிற்சலாந்து, ருசியா என்பனவும் இன்னும் பலவுமாம்.

ஐரோப்பாக் கண்டத்து நாடுகள் மேலைத் தேசங்கள் என்பர், அவை மேற்கு நாடுகள் எனப்படும். அங்கே வாழ் பவர் ஐரோப்பியர். ஐரோப்பியர் பல இனத்தவர். அவர்கள் பல மொழிகளைப் பேசுவர்.

பிரித்தானியாவில் உள்ளவர் பிரித்தானியர். அவரை ஆங்கிலேயர் எனவும், வெள்ளைக்காரர் எனவும் கூறுகிறோம். அவர்கள் ஆங்கில மொழியைப் பேசுகிறார்கள். பிரான்சில் உள்ளவர் பிரெஞ்சுக்காரர். அவர்கள் பிரெஞ்சு மொழியைப் பேசுவர். யேமனியில் யேமனியர் யேமன் மொழியைப் பேசுவர் இப்படியே ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அந்நாட் டவர் தங்கள் மொழியைப் பேசுகிறார்கள்.

ஐரோப்பியர் முயற்சி உள்ளவர். அவர்கள் தூரதேசங்களுக்குச் சென்று வியாபாரம், கைத்தொழில், தோட்டம் செய்கிறார்கள். ஐரோப்பியர் கிறிஸ்தவ சமயத்தவர் அவர்கள் காற்சட்டை, மேற்சட்டை, தொப்பி, சப்பாத்து அணிவார்கள். அவர்கள் குளிர் காலத்தில் கம்பளி ஆடைகளை அணிவார்கள். அவர்கள் பாண், இறைச்சி, முட்டை, பழம், ஆகிய உணவுகளை உண்பர்.

போத்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகிய ஐரோப்பியர் முற்காலத்தில் எங்கள் நாட்டுக்கு வந்து வியாபாரஞ் செய்து, எங்கள் நாட்டைப் பலகாலம் ஆண்டார்கள்.

## அப்பியாசம்

1. ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள நாடுகள் எவை ?
2. ஐரோப்பியரின் உணவுகள் எவை ?
3. அவர்கள் அணியும் உடைகள் எவை ?
4. பிரித்தானியரை வேறு எங்ஙனம் அழைப்பர் ?
5. மேலைத்தேசங்கள் என்று கூறுவது ஏன் ?
6. இலங்கையை ஆண்ட ஐரோப்பியர் யாவர் ?
7. ஐரோப்பிய மொழிகள் எவை ?

## பாடம் மூன்று

# (அ) தொழில்கள்

எங்கள் ஊரில் உள்ளவர் பல தொழில்களைச் செய்கிறார்கள். கமஞ்செய்தல், வியாபாரஞ்செய்தல், சுருட்டுவேலை செய்தல், மரவேலை செய்தல், இரும்புவேலை செய்தல், மட்பாண்டஞ் செய்தல், கட்டடவேலை செய்தல், மீன்பிடித்தல் ஆகிய தொழில் களை மக்கள் செய்கிறார்கள்.

தொழிலாளர் இல்லாவிட்டால் எமக்குத் தேவையான பொருள்களை நாம் வாங்க முடியாது. பானை, சட்டி, கத்தி, கோடரி, மண்வெட்டி, மேசை, கதிரை, பாய், கடகம், புடைவை ஆகியவை எமக்குத் தேவையான பொருள்கள்.

எங்கள் தேவைப் பொருள்களைச் செய்து தருபவர் தொழி லாளர். நமது உணவுப் பொருள்களை உண்டாக்கித் தருபவர் தொழிலாளர். நமது உடைகளைத் தயாரித்துத் தருபவர் தொழிலாளர். வீடுகளையும், பாடசாலையையும், கோயிலையும் கட்டித் தந்தவர் தொழிலாளர்.

மண்ணெ டுத்துக் குடங்கள் செய்வீரே!
மரத்தை வெட்டி மனை செய்குவீரே!
உண்ணக் காய்கனி தந்திடுவீரே!
உழுது நன்செய்ப் பயிரிடுவீரே!
எண்ணெய் பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் ஆடைசெய் வீரே!
விண்ணில் நின்றெமை வானவர் காப்பார்!
மேவிப் பார்மிசை காப்பவர் நீரே!

— பாரதியார்

## (ஆ) கமம் செய்வோர்

எங்கள் உணவுத் தானியம் நெல். நெல்லைக் குற்றி அரிசி எடுக்கிறோம். அரிசியைச் சமைத்துச் சோறு ஆக்குகிறோம். அரிசியை இடித்து மாவாக்கி அப்பம், பிட்டு, இடியப்பம் செய்கிறோம்.



கலப்பை

நெல் வயலில் விளையும். நெல்லை விளைவு செய்பவர் கமக்காரர். கமக்காரரை உழவர் என்றுங் கூறுவர். கமக்காரர் வயலைக் கலப்பையால் உழுவர். கலப்பையை மாடு, எருமை முதலிய மிருகங்கள் இழுக்கும்.

கமக்காரர் வயலுக்குப் பசளை இடுவர். எரு, சாம்பல், குப்பை, இலை, தழை என்பன நல்ல பசளை. பசளை இட்டு உழுத நிலத்தில் நெல்லை விதைப்பார்கள். முளைகள் முளைத்து வளரும்போது நீர் பாய்ச்சுவர். நெருக்கமாய் முளைத்த பயிரைப் பிடுங்கி நாற்று நடுவார்கள். புல், பூண்டு ஆகிய களைகளைப்பிடுங்கி எறிவார்கள். நெற்பயிரைப் பாதுகாப்பார்கள்.

பயிர்களில் இருந்து கதிர்கள் உண்டாகும். கதிர்களில்



நெற்பயிர்

நிரை நிரையாய் நெல் மணிகள் இருக்கும். நெல்மணிகள் நன்ருக முற்றிஞல் மஞ்சள் நிறமாய் மாறும். கதிர்கள் முற்றியபின் அவற்றை அறுப்பார்கள். கதிர்களை அறுப்பதை அறுவடை செய்தல் என்பர்:

அறுவடை செய்த கதிர்களை அடித்து நெல்லை வேருக வும், வைக்கோலை வேருகவும் எடுப்பர். அதனைக் கதிர் அடித்தல் என்பர். சிலர் மிருகங்களைக் கொண்டு மிதிப்பித்து வேருக்குவர். இதனைச் சூடு மிதித்தல் என்பர்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

## அப்பியாசம்

விடை எழுதுக.

1. கமக்காரரை வேறு எப்படி அழைப்பர்?
2. வயலை எப்படி உழுகிருர்கள்?
3. வயலில் இடப்படும் பசளைகள் எவை?
4. வயல் உழுவதற்கு உதவும் மிருகங்கள் எவை?
5. நாற்று நடுதல் என்ருல் என்ன?
6. களை பிடுங்குதல் என்ருல் என்ன?
7. அறுவடை செய்தல் என்ருல் என்ன?
8. கதிர் அடித்தல் என்ருல் என்ன?

## (இ) உழவர் வாழ்க.

1. உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க வாழ்கவே
மண்ணை உழுது பயிர்களை
வளர்க்கும் உழவர் வாழ்கவே.

2. ஒன்றை நூறு நெற்களாய்
உண்டு பண்ணித் தருபவர்
நன்கு உழுது வியர்வையால்
நனைந்து போக உழைப்பவர்.

3. பாடு பட்டு உழுபவர்
பலனுங் கண்டு தருபவர்
நாடு வளர வாழ்பவர்
நன்கு வாழ்க வாழ்கவே.

— அழ — வள்ளியப்பா.

## (ஈ) மட்பாண்டஞ் செய்வோர்.

நாங்கள் உணவு சமைப்பதற்கு மட்பாண்டங்கள் தேவை. பானை, சட்டி, குடம், குண்டான் முதலிய பாத்திரங்கள் மண்ணாற் செய்யப்படும்.

மட்பாண்டங்களைக் களிமண்ணாற் செய்வர். களிமண் பசை உள்ளதாய் இருக்கும். பாண்டஞ் செய்பவன் களி மண்ணை எடுத்து நீர்விட்டுப் பிசைந்து பதப்படுத்துகிறான். பதமான மண்ணைச் சிறு உருண்டையாகத் திரட்டுகிறான். மண் உருண்டையைச் சக்கரத்தில் வைத்துச் சுழற்றுகிறான்.



மட்பாண்டஞ் செய்தல்

சக்கரத்தைச் சுழற்றி விதம் விதமான பாத்திரங்கள் செய்வான். அவற்றைச் சூளையில் இட்டுச் சுடுவான். சூளையில் வெந்த பாண்டங்கள் உறுதியாய் இருக்கும்.

களிமண்ணில் இருந்து ஓடு, செங்கட்டி என்பனவும் செய்வர். செங்கட்டி வீடு கட்டவும், ஓடு வீடு வேயவும் உதவும்.

முற்காலத்தில் இருபாலை, சங்கானை, துன்னாலை, முருங்கன் முதலிய இடங்களில் மட்பாண்டம் செய்தார்கள். இக்காலத்தில் கழனியாவில் மட்பாண்டத் தொழிற்சாலை உண்டு.

## அப்பியாசம்

1. மட்பாண்டங்கள் எவை ?
2. களிமண் எப்படியானது ?

3. மட்பாண்டம் செய்யும் இயந்திரம் எது ?
4. மட்பாண்டம் எப்படி உறுதி பெறுகிறது ?
5. மண்ணால் வேறென்ன செய்கிறார்கள்?
6. ஓடு எதற்கு உபயோகமாகும் ?
7. செங்கட்டியின் உபயோகம் என்ன ?
8. மட்பாண்டஞ் செய்தவர் எங்கே வாழ்ந்தனர் ?

## (உ) மரவேலை செய்வோர்.

எங்கள் வீட்டில் உள்ள வளை, தீராந்தி, சலாகை, கதவு, யன்னல் என்பன மரத்தால் ஆனவை. இன்னும்



மரம் அரிதல்

கதிரை, மேசை, கட்டில், வாங்கு யாவும் மரத்தால் ஆனவை. பாடசாலையில் உள்ள தளபாடங்கள் மரத்தால் ஆனவை.

மரவேலை செய்வோர் மரங்களை அரிந்து தளபாடங்கள் செய்கிறார்கள். அவர்கள் பலவிதமான ஆயுதங்களை உபயோகிப்பர். அவர்களிடம் வாள், உளி, சீவுளி, அரம் முதலிய ஆயுதங்கள் உண்டு. ஆயுதங்கள் இரும்பினால் ஆனவை.

மரவேலையைத் தச்சுவேலை என்பர். மரவேலை செய்வோர் வேம்பு, பலா, தேக்கு, முதிரை, சமண்டலை முதலிய மரங்களை அரிந்து தளபாடங்கள் செய்வர்.

## அப்பியாசம்

1. வீட்டில் உள்ள தளபாடங்கள் எவை ?
2. பாடசாலையில் உள்ள தளபாடங்கள் எவை ?
3. தச்சுவேலை செய்ய உதவும் மரங்கள் எவை ?
4. தச்சுவேலை செய்ய உதவும் ஆயுதங்கள் எவை ?

## (ஊ) இரும்புவேலை செய்வோர்.

கத்தி, கோடரி, மண்வெட்டி, பாக்குவெட்டி, அரிவாள், துருவுபலகை எல்லாம் இரும்பால் ஆனவை.

எங்கள் வீட்டில் உள்ள யன்னற்கம்பிகள், பூட்டு, திறப்பு, ஆணி, கொழுக்கி என்பன இரும்பால் ஆனவை. இரும்பு ஒரு உலோகம்.

இரும்பு மிகவும் உபயோகமான உலோகம். இரும்பைப் போன்ற வேறு உலோகங்கள் பொன், வெள்ளி, செம்பு, தகரம் என்பனவாம்.

பூமியின் அடிப்பாகத்தில் இரும்புச் சுரங்கம் உண்டு. சுரங்கத்தில் உள்ள இரும்பு சுத்தமாய் இருக்காது. அதனை நெருப்பில் இட்டுக் காய்ச்சிச் சுத்தம் செய்வார்கள். சூடு பட்டால் இரும்பு இளகும். இளகிய இரும்பை அடித்து நெளித்து ஆயுதங்கள் செய்வார்கள்.


வில், அம்பு, வேல், வாள்

இரும்பு வேலை செய்யப்படும் இடம் பட்டடை எனப்படும். இரும்பைக் காய்ச்சும் இடம் உலை எனப்படும்.

இரும்பின் உபயோகத்தை அறிந்தபின் மனிதர் நாகரிகம் அடைந்தனர். முற்காலத்து மக்கள் கல்லால் ஆயுதங்கள் செய்தனர். கல்ஆயுதங்கள் உபயோகமான காலம் கற்காலம் எனப்படும். இரும்பு ஆயுதங்களை உபயோகித்த காலத்தை இரும்புக்காலம் என்பர். வில், அம்பு, வேல், வாள் முதலியன இரும்பினால் ஆனவை.

## அப்பியாசம்

I. 1. வீட்டில் உள்ள ஆயுதங்கள் எவை ?
2. இரும்பினால் செய்யப்பட்ட பொருள்கள் எவை ?
3. உலோகங்கள் எவை ?
4. இரும்பு எப்படிக் கிடைக்கிறது ?
5. இரும்பை எப்படிச் சுத்தஞ் செய்வர் ?
6. இரும்பால் ஆன யுத்த ஆயுதங்கள் எவை ?

II. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதுக.

1. சூடுபட்ட இரும்பு ........................
2. இரும்பைக் காய்ச்சும் இடம் ......................
3 இரும்பு வேலை நடைபெறும் இடம் ....................
4, இரும்பால் ............ ............ ............ செய்தனர்.

## (எ) வியாபாரஞ் செய்வோர்

நாம் எமக்குத் தேவையான பொருள்களைக் கடைகளில் வாங்குவோம். நகரங்களில் பெரிய கடைகள் உள்ளன. அங்கே புடைவைக்கடை, பழக் கடை, இரும்புக்கடை, புத்தகக்கடை, பலசரக் குக்கடை, பாத்திரக்கடை என்பன உண்டு.



தராசு — படியும்

நாங்கள் அரிசி, மா, சீனி, தேயிலை, கோப்பி, கறிச்சரக்கு முதலிய பொருள்களை வாங்குகிறோம். இவை உணவுப் பொருள்கள்.

எமக்குத் தேவை யான பொருள்களை வியாபாரஞ் செய்பவர் வியாபாரிகள், அவர்கள் சில பொருள்களை நிறுத்து விற்பார்கள்.



கொத்துகள்

நிறுத்தல் அளவைக்குத் தராசு படிகள் தேவை. சில பொருள்களை அளந்து விற்பார்கள். அவற்றுக்கு முகத்தல் அளவை உபயோகம் ஆகும். முகத்தல் அளவைக்குக் கொத்துக்களை உபயோகிப்பர்.

புடைவையை அளந்து விற்பார்கள், இதற்கு நீட்டல் அளவை உபயோகமாகும். நீட்டல் அளவையில் யார்த்தடி உபயோகமாகும். ஒரு யார் மூன்று அடி நீளம் உள்ளது. நாங்கள் அடிமட்டத்தை அறிவோம்.

## அப்பியாசம்

I. 1. நாங்கள் நிறுத்து வாங்கும் பொருள்கள் எவை?
   2. நாங்கள் அளந்து வாங்கும் பொருள்கள் எவை?
   3. பெரிய வியாபார நிலையங்கள் எங்கே உள்ளன?

II. கீழே குறிக்கப்பட்ட கடைகளில் நாம் வாங்கும் பொருள்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. புத்தகக்கடை | புத்தகம் | கொப்பி |
| 2. புடைவைக்கடை | ..................... | ..................... |

| | | |
|---|---|---|
| 3. உணவுச்சாலை | ...................... | ...................... |
| 4. மீன் சந்தை | ...................... | ...................... |
| 5. காய்கறிச் சந்தை | ...................... | ...................... |
| 6. பலசரக்குக் கடை | ...................... | ...................... |
| 7. மருந்துச் சாய்ப்பு | ...................... | ...................... |
| 8. பாத்திரக்கடை | ...................... | ...................... |
| 9. இரும்புக்கடை | ...................... | ...................... |
| 10. பழக்கடை | ...................... | ...................... |
| 11. பூக்கடை | ...................... | ...................... |

## (ஏ) மீன்பிடிப்போர்

மீன் நீரில் வாழும். நண்டு, இறல், சிப்பி, சங்கு, திமிங்கிலம் முதலியன நீரிலே வாழுகின்றன. மீனிற்பலஇனங்கள் உண்டு. சில சிறியவை. சில பெரியவை. சில மீன்கள் நீளமானவை. சில உருண்டு திரண்ட உருவம் உள்ளவை. சில தட்டையான உருவம் உள்ளவை. சில வெள்ளை நிறம் உள்ளவை. சில கறுப்பு நிறம் உள்ளவை. சில செந்நிறமானவை.



மீன்கள்



மீன்பிடிப்போர்

மீன்களுக்கு விதம் விதமான பெயர்கள் உண்டு. அவை ஓட்டி, ஓரா, கயல், கிளாத்தி, சுறு, சூரை, பாலை, மணலை, திரளி, திருக்கை என்பனவும் இன்னும் பலவுமாம்.

மீன் பிடிப்போர் ஆறுகளிலும், கடலிலும் மீன் பிடிப்பர். அவர்கள் பலவிதமான வலைகளை வீசி மீன் பிடிப்பர். சிலர் பெரிய வள்ளங்களில் ஏறிச்சென்று அதிக மீன் பிடிப்பர். மீன் பிடிப்போர் கடற்கரையில் குடியிருப்பர்.

## அப்பியாசம்

1. மீன் எங்கே வாழும் ?
2. நீரில் வாழும் வேறு உயிர் இனங்கள் எவை ?
3. மீனின் இனங்கள் எவை ?
4. மீனை எப்படிப் பிடிக்கிறார்கள் ?
5. மீன் பிடிப்போர் எங்கே குடியிருப்பர் ?

பாடம் நான்கு

## (அ) ஆசிரியர்

எங்கள் ஆசிரியர் மிகவும் நல்லவர். அவர் அன்புடன் பாடம் சொல்லித் தருகிறார். அவர் சமயபாடம், வாசிப்பு,



9 வகுப்பு

எழுத்து, வரைதல், சூழல் ஆகிய பாடங்கள் சொல்லித் தருகிறார்.

ஆசிரியர் ஒரு பெரியார். அம்மா, அப்பாவைப்போல அவரும் பெரியவர். அவரை நாங்கள் வணங்குதல் வேண்டும்.

நாங்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருதல் வேண்டும். ஆசிரியருக்கு அமைந்து நடத்தல் வேண்டும். அவர் சொல்லும் பாடங்களைக் கவனமாகக் கேட்டுப் படித்தல் வேண்டும்.

ஆசிரியருக்குப் பணிந்திடு !
அன்பாக அடங்கி நடந்திடு !
அம்மா அப்பா போலவே
அவரும் உனக்குத் தெய்வமே !
எதிரில் வந்ததும் எழுந்திடு !
இருக்கச் சொன்னதும் இருந்திடு !
புதிய பாடம் கேட்டிடு !
புத்தகம் படித்துக் காட்டிடு !

— சுப்பு ஆறுமுகம்

## அப்பியாசம்

1. உம்முடைய பெயர் என்ன ?
2. உம்முடைய ஆசிரியர் பெயர் என்ன ?
3. உம்முடைய பாடசாலையின் பெயர் என்ன ?
4. நீர் படிக்கும் பாடங்கள் எவை ?
5. உம்முடைய தலைமை ஆசிரியரின் பெயர் என்ன ?

## (ஆ) வைத்தியர்

நாம் சில வேளைகளில் நோயினால் வருத்தம் அடைகிறோம். நோய்கள் பல வகைப்படும். எம் நோயை நீக்குபவர் வைத்தியர்.

வைத்தியரை ஆங்கில மொழியில் டொக்டர் என்று கூறுவர். அவருக்கு நோயின் காரணம் தெரியும். அவர் நோயை நீக்கும் மருந்தை அறிவர். அவரிடம் பல மருந்துகள் உண்டு.



வைத்தியர்

வைத்தியர் சில மருந்தை ஊசிமூலம் பாய்ச்சுவர். சில மருந்தை உண்ணத் தருவார். சிலமருந்தைப் பருகக்கொடுப் பார். சில மருந்து கசக்கும். ஆனால் அவை நோயை நீக்கும். ஆதலால் நாம் மருந்தை ஊற்றி விடாமல் பருகு தல் வேண்டும்.

வைத்தியருக்கு உதவி செய்பவர் மருத்துவம் அறிந்த அம்மா. அவரைத் தாதி என்று கூறுவர். அவர் வைத்திய ருக்கு அருகில் நிற்பதைப் படத்தில் பாருங்கள்.

வைத்தியர் நல்லவர். அவர் பெரியவர். அவர் நாம் நோய் அடையாமல் இருக்கப் புத்திமதி கூறுவார். அவர் கூறும் நோயணுகா விதிகளைப் படியுங்கள்.

1. மலகூடத்தில் மலசலம் கழி.
2. காலையும் மாலையும் பல் துலக்கு.
3. தினமும் காலையிற் குளி.
4. சுத்தமான ஆடையை அணி.
5. உண்பதன் முன் கைகளைக் கழுவு.
6. சுத்தமான சத்துள்ள உணவை உண்.
7. கொதித்து ஆறிய நீரைக் குடி.
8. தினமும் நன்றாக விளையாடு.
9. கோபம் கொள்ளாது மகிழ்ச்சியோடு இரு.
10. இரவில் நன்றாக நித்திரை செய்.

## (இ) பொலிசுக்காரர்.

பொலிசுக்காரர் ஊரைக் காவல் செய்வர். வீதிகளில் வண்டிகளை ஒழுங்காகப் போகச்செய்வர். வழி தெரியாத மக்களுக்கு வழி காட்டுவர்.



பொலிசுக்காரர்

வீதியில் நடந்து செல்லும் ஆட்களைப் பாதை ஓரமாகப் போகச் சொல்லுவர். சந்திகளில் நின்று விபத்து வராமல் பாதுகாப்பர்.

குற்றஞ் செய்பவர் குற்றவாளி கள். களவு எடுத்தல், பிறரை ஏமாற்றுதல், பிறரைப் பயமுறுத் தல், பிறருக்கு அடித்தல் ஆகி யவை குற்றமுள்ள செயல்கள்.

குற்றங்கள் செய்தவரைப் பொலிசுக்காரர் பிடிப்பார்கள். குற்றவாளிகளைப் பொலிஸ் நிலை யத்துக்கு அழைத்துச் சென்று மறித்து வைப்பார்கள்.

பொலிசுக்காரர் ஊருக்கு நன்மை செய்வர். அவர் வெயில், மழை என்றும் பாராமல் தம் கடமையைச் செய்கிறார்கள். அவருடைய சேவைக்கு நாம் நன்றி சொல்லுதல் வேண்டும்.

## அப்பியாசம்

கீறிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை எழுதுக.

1. ...................... ஊரைக் காவல் செய்வர்.
2. பொலிசுக்காரர் ...................... நிற்பர்.
3. ................ வண்டிகளை ............ போகச் செய்வர்.
4. ................ செய்வோர் ................ .
5. குற்றவாளியைப் பொலிசுக்காரர் ................
6. பொலிசுக்காரர் ஊருக்கு ............... செய்வர்.

## (ஈ) தபாற்காரர்

எங்கள் உறவினர், நண்பர் எமக்குக் கடிதம் எழுதுவர். நாங்களும் அவர்களுக்கு எழுதுகிறோம். கடிதத்தைத் தபால் என்றும் கூறுவர். நாங்கள் எழுதிய தபாலைத் தபாற் பெட்டியுள் போடுகிறோம். எங்களைப் போலவே பிறருந் தபால் எழுதுவர்.



தபாற்பெட்டி

தபால் உத்தியோகத்தர் தபாற் பெட்டியைத் திறந்து தபால்களை எடுக்கிறார். அவற்றைத் தபால் வானில், ஏற்றித் தபாற் கந்தோருக்குக் கொண்டு போகிறார்.

தபாற்கந்தோரில் தபால்களை ஒழுங்கு செய்து பெரிய பைகளில் போட்டுக் கட்டுவர். அவற்றை மெயில் வண்டியில் ஏற்றி அனுப்புவர்.

பிற ஊர்களில் இருந்து வரும் தபால்கள் மெயில்வண்டியில் வந்து இறங்கும். அவற்றையும் தபாற்கந்தோரில் ஒழுங்கு செய்வர். எங்கள் உறவினர் எழுதிய தபால்களைத் தபாற்காரர் எம்மிடம் தருகிறார்.

தபாற்காரர் நல்ல சேவை செய்கிறார். அவர் மழையிலும் வெயிலிலும் எமக்குத் தபால் கொண்டு வருவார். நாம்

அவருக்கு நன்றி கூறுதல் வேண்டும். அவரைத் தபாற் கார மாமா என்று அழைத்தல் நல்ல பழக்கம்.

## அப்பியாசம்

1. தபாற்பெட்டி எங்கே உள்ளது ?
2. தபாற்பெட்டியின் நிறம் என்ன ?
3. தபால் உறையில் என்ன எழுதுவர் ?
4. தபால் உறையில் என்ன ஒட்டுவர் ?
5. உமது வீட்டு விலாசம் என்ன ?
6. தபால் முத்திரையின் விலே என்ன ?
7. தபாற்கார மாமா என்ன உடை அணிகிருர் ?

## பாடம் ஐந்து.

## (அ) எமது வீடு

நாங்கள் வீட்டில் வசிக்கிறேம். வீடு இல்லாவிட்டால் வெயில் எம்மைக் காயும், காற்று வாட்டும், மழை நனேக் கும். வீட்டை மனே, இல்லம், உறைவிடம் எனவும் கூறுவர்.

பறவைகள் தங்குவதற்குக் கூடு கட்டுகின்றன. சில பறவைகள் மரப்பொந்துகளில் வசிக்கின்றன. மிருகங்கள் குகைகளிலும் மரநிழலிலும் தங்குகின்றன.

முற்காலத்து மனிதர் குகைகளில் வசித்தார்கள். சிலர் மரங்களின் கீழ் வாழ்ந்தார்கள். பின்னர் காட்டுமரங்களே

வெட்டித் தடி, தண்டுகளைக் கொண்டு குடிசைகள் கட்டினார் கள். இலை, தழை, வைக்கோல் கொண்டு குடிசைகள் வேய்ந்தார்கள்.



வீடு

சிலர் பெரிய குடிசைகளைக் கட்டினார்கள். தென்னோலை, பனையோலை கொண்டு வேய்ந்தார்கள். மண்ணால் சுவர் அமைத்தார்கள். நிலத்தைச் சாணியால் மொழுகினார்கள்.

பிற்காலத்தில் பெரிய வீடுகள் கட்டினார்கள். வீடுகள் அமைப்பதற்குக் கல், செங்கட்டி, சுண்ணாம்பு, சிமெந்து, இரும்பு, மரம், ஓடு, தகரம், கண்ணாடி ஆகிய பொருள்களைப் பயன் படுத்தினார்கள்.

இக்காலத்து வீடுகள் அழகானவை. அவை பெரியவை. தலைவாசல், கூடம், விருந்தை, அறை, அடுப்படி, மாடி ஆகிய

பல பகுதிகள் வீட்டில் உள்ளன. சிலர் இரண்டு மூன்று மாடிகள் உள்ள பெரிய மாடங்களைக் கட்டுகிறார்கள்.

வீடு கட்டுவதற்குப் பல தொழிலாளர் வேலை செய்வர். மரவேலை செய்வோர், இரும்புவேலை செய்போர், மேசன் வேலை சொய்வோர் தொழில் செய்கிறார்கள். தொழிலாளர் இல்லாவிட்டால் நாம் வீடு கட்ட இயலாது.

## அப்பியாசம்

I. விடை எழுதுக.

1. நாம் ஏன் வீட்டில் வசிக்கிறோம் ?
2. முற்காலத்து மனிதர் எங்கே வசித்தார்கள் ?
3, குடிசைகளை எவற்றால் அமைத்தார்கள் ?
4. மண்வீடுகளை எப்படி அமைத்தார்கள் ?
5. வீடுவேய உதவுவன எவை ?
6. பெரிய வீடு கட்டவேண்டிய பொருள்கள் எவை ?
7. வீட்டில் உள்ள பல பகுதிகள் எவை ?
8. வீட்டுக்கு ஏன் யன்னல் வைக்கிறார்கள் ?
9. வீடுகட்டுந் தொழிலாளர் யாவர் ?

II. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதுக.

1. பறவைகள் ........ ... ......... தங்குகின்றன.
2. மிருகங்கள் ..................... தங்குகின்றன.
3. வீட்டை .. ... ..... .......... ........... எனவும் கூறுவர்.
4. யன்னலால் .............. .............. உள்ளே வரும்.
5. கதவு ........ ...... ................ ............ செய்யப்படும்
6. கூரை ..... ....... .................. வேயப்படும்.
7, எஸ்கிமோவர் .................. தங்குகிறார்கள்.
8. .. ....... ........... கூடாரத்தில் தங்குகிறார்கள்.

## (ஆ) எழுத்தின் கதை

நாங்கள் பாடசாலையிற் படிக்கிறோம். புத்தகம் வாசிக்கிறோம். சிலேற்றில் எழுதுகிறோம். மேல் வகுப்பில் கொப்பியில் எழுதுவோம். பல புத்தகங்களை வாசிப்போம். புத்தகத்தை நூல் எனவும் கூறுவர்.

முற்காலத்தில் புத்தகத்தை ஏடு என்று கூறினர். ஏடு பனை ஓலையால் ஆனது. முற்காலத்தில் பனை ஓலையில் எழுத்தாணியால் எழுதினார்கள். எழுத்தாணி இரும்பால் ஆனது. அது கூர் உள்ளது.

எகிப்து நாட்டில் எகிப்தியர் வாழ்ந்தார்கள். அவர்கள் நாகரிகம் உள்ளவர்கள். அவர்கள் புல்லில் எழுதினர்கள் அப்புல் அகலமானது. தடிப்பானது. பாபிலோனியா தேசத்தில் பாபிலோனியர் களிமண் கட்டிகளில் எழுதினார்கள்.

சீனர் அச்சு இயந்திரத்தைக் கண்டார்கள். அவர்கள் புத்தகங்களை ஆக்கினார்கள். அவர்களைப் பார்த்து எல்லா நாட்டினரும் அச்சுக்கூடம் அமைந்தார்கள். புத்தகங்களை அச்சிட்டார்கள்.

இக்காலத்தில் எல்லா நாடுகளிலும் அச்சுக்கூடங்கள் உண்டு. அங்கே பலவிதமான புத்தகங்களை அச்சிடுகிறார்கள். அங்கே பல தொழிலாளர் வேலை செய்கிறார்கள்.

### அப்பியாசம்

விடை எழுதுக.

1. *நாம் எழுதும் உபகரணங்கள் எவை ?*
2. *தமிழ் மொழியில் முதல் எழுத்து எது ?*
3. *உம்முடைய பெயரை எழுதுக.*

4. ஏடு எதனால் ஆனது?
5. ஏட்டில் எப்படி எழுதினார்கள்.

## (இ) நெருப்பின் கதை.

அடுப்பில் நெருப்பு எரிகிறது. அதனால் சூடு உண்டாகிறது. சூட்டினால் உணவு வேகிறது. வெந்த உணவு சுவை உள்ளதாய் இருக்கிறது.

இரும்புவேலை செய்வோர் நெருப்பை மூட்டி இரும்பை உருக்கி ஆயுதஞ் செய்வர். பொன் வேலை செய்வோர் பொன்னை உருக்கி ஆபரணஞ் செய்வர். நெருப்பு மிகவும் உபயோகம் உள்ளது.

விளக்கு எரிகிறது. அது ஒளியைத் தருகிறது. நெருப்பு ஒளியையும் சூட்டையும் தருகிறது.

முற்காலத்தில் நெருப்புப் பெட்டி இல்லை. முற்காலத்து மக்கள் இரண்டு காய்ந்த மரக் கட்டைகளை உரோஞ்சி நெருப்பு மூட்டினார்கள். அக்கட்டைகளை அரணிக் கட்டைகள் என்பர்.



விளக்கு

சிலர் இரண்டு கற்களைப் பலமாக உரோஞ்சினர் அதனால் நெருப்புப் பொறி உண்டானது. நெருப்புப் பொறியைப் பஞ்சு, தும்பு, சருகு ஆகிய ஒன்றில் மூட்டினர். அந்தக்

கல் தீக்கல் எனவும், தீத்தட்டிக்கல் எனவும் பெயர் பெற்றது. தீ என்றால் நெருப்பு.



நெருப்புக்கடைதல்




நெருப்புப்பெட்டி

இக்காலத்தில் தீப் பெட்டி உண்டு. தீப் பெட்டியை நாங்கள் நெருப்புப் பெட்டி என்றுங் கூறுகிறோம். நெருப்புப் பெட்டியின் உதவியால் இலகுவாக நெருப்பு மூட்டுகிறோம்.

பலவிதமான விளக்குகளில் வெளிச்சம் ஏற்றுகிறோம்.

இக்காலத்தில் எங்கும் மின்சாரவெளிச்சம் உண்டு. அது மிகவும் பிரகாசம் உள்ளது. மின்சாரத்தால் வெளிச்சம் ஏற்றுதல், உணவு சமைத்தல், தண்ணீர் இறைத்தல், இயந்திரங்களை இயக்குதல் முதலிய வேலைகளைச் செய்கிறார்கள்.



மின்சார வெளிச்சம்

## அப்பியாசம்

விடை எழுதுக.

1. நெருப்பின் வேறு பெயர்கள் எவை ?
2. நெருப்பின் உபயோகம் என்ன ?
3. நெருப்பை எப்படி மூட்டுவர் ?
4. நெருப்பு இலகுவில் பற்றும் பொருள்கள் எவை ?
5. நெருப்புப் பற்றாத பொருள்கள் எவை ?
6. முற்காலத்தில் நெருப்பை எப்படி மூட்டினர் ?
7. விளக்கில் இடப்படும் எண்ணெய் வகைகள் எவை ?
8. மின்சாரத்தின் உபயோகம் என்ன ?

# (ஈ) வண்டி வாகனம் வளர்ந்த கதை

நாங்கள் சைக்கிள் வண்டி, றிச்சோ வண்டி, மாட்டு வண்டி, மோட்டார்வண்டி, பஸ்வண்டி, டீசல்வண்டி எனப் பல வண்டிகளைப் பார்க்கிறோம். இவை பிரயாணஞ் செய்வதற்கு உதவியாய் உள்ளன.

முற்காலத்தில் வண்டிகள் இல்லை. முற்காலத்து மக்கள் கால் நடையாகவே பிரயாணஞ் செய்தனர். பின்னர் குதிரை யானை முதலிய மிருகங்களைப் பழக்கி அவற்றில் ஏறிப் போனார்கள்.



றிச்சோ வண்டி

சிலகாலஞ் செல்ல அவர்கள் வண்டிகளைச் செய்தார்கள். வண்டிகளில் மாடு, குதிரை ஆகிய மிருகங்களைப் பூட்டி சவாரி செய்தார்கள்.

மோட்டார் வண்டி வேகமாய் ஓடும். அது இயந்திரத்தின் உதவியால் ஓடுகிறது. அது ஐரோப்பா, அமெரிக்கா, முதலிய தேசங்களிற்செய் படுகிறது.

மோட்டார் வண்டியிலும் பார்க்க பஸ்வண்டி பெரியது. பஸ்வண்டியில் அதிகம்பேர் பிரயாணஞ் செய்வர். பஸ்வண்டிகளில் இ. போ. ச. என்னும் எழுத்துக்கள் உள்ளன. அவை இலங்கைப் போக்கு வரத்துச்சபை என்பதன் சுருக்கம் ஆகும்.



மாட்டு வண்டி

மெசல் வண்டி தண்டவாளத்தில் ஓடும். அது மிகவும் பெரியது. அதிலே பலபெட்டிகள் தொடர்ந்து பூட்டப்பட்டு உள்ளன. அவற்றில் நூற்றுக்கணக்கான மக்கள் பிரயாணஞ் செய்வர்.



பஸ் வண்டி

சில டீசல் வண்டிகள் வேகமாகப் போவன. அவை யாழ்தேவி, உத்தரதேவி என்னும் பெயர் உள்ளவை. அவற்றைப்போலவே உதயதேவி, பொடிமெனிக்கா, உருகுணதேவி முதலிய வண்டிகளும் வேறிடங்களில் ஓடுவன.



டீசல் வண்டி

இங்கிலாந்து, அமெரிக்கா, யப்பான் முதலிய தேசங்கள் வெகு தூரத்தில் உள்ளவை. அவை கடல் கடந்துபோக வேண்டிய தேசங்கள். கடலைக் கடக்கக் கப்பல்கள் உள்ளன. கப்பல்கள் பெரியவை. சில கப்பல்கள் எங்கள் வீடுகளிலும் பார்க்கப் பெரியவை. அவற்றில் ஆயிரம் மக்கள் பிரயாணஞ் செய்யலாம். கப்பல்களில் பலநாள்கள் பிரயாணஞ் செய்வர். அவற்றில் உண்டு, உறங்கிப் போக வசதிகள் உள்ளன. கப்பல்கள் தங்கிப்போகும் இடம் துறைமுகம் எனப்படும். கொழும்பு



கப்பல்

ஒருபெரிய துறைமுகம். காங்கேயன்துறை ஒரு சிறிய துறைமுகம்.



ஆகாய விமானம்

ஆகாயவிமானம் பறவைபோல ஆகாயத்தில் பறக்கும். அதிலே நூறுபேர் வரை பிரயாணஞ் செய்யலாம். அது மிக வேகமாகப் போகும். பலாலியில் ஆகாயவிமானம் தங்கும்

இடம் உண்டு. பலாலியில் விமானம் ஏறிக் கொழும்புக்குப் போகலாம். கொழும்பில் இருந்து இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, சிங்கப்பூர், யப்பான் முதலிய தூரதேசங்களுக்குப் போகலாம்.

## அப்பியாசம்

கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை நிரப்புக.

1. மனிதர் இழுக்கும் வண்டி ........................ .
2. ........................ வண்டி இழுக்கும் மிருகங்கள்.
3. ........................ வண்டி வீதியில் வேகமாகப் போகும்.
4. ........................ வண்டி தண்டவாளத்தில் போகும்.
5. பஸ்வண்டியில் ............... எழுத்துக்கள் உள்ளன.
6. யாழ்தேவி ........................ வேகமாகப் போவன.
7. கப்பல் ........................ மிதந்து போகும்.
8. ........................ துறைமுகத்தில் தங்கிப்போகும்.
9. விமானம் ஆகாயத்தில் ........................ போகும்,
10. பலாலியில் ........................ நிலையம் உண்டு.

## (உ) நமது ஆடைகள்.

நாம் ஆடைகளை அணிகிறோம். ஆடைகளை உடைகள் எனவும் உடுப்புகள் எனவும் கூறுவர். ஆடைகள் சூட்டைத் தாங்கும். குளிரைப் போக்கும். அலங்காரமாய் இருக்கும். மானத்தைக் காக்கும். ஆடை இல்லாதவன் அரை மனிதன் என்பது பழமொழி. ஆடை அணியாவிட்டால் மரியாதை இல்லை.

முற்காலத்தில் இலை, தழை, மரப்பட்டை, மிருகங்களின் தோல் ஆகியவற்றை அணிந்தனர்.



பருத்திச்செடி



மல்பெரிச்செடியும் பட்டுப்பூச்சியும்

பின்னர் பஞ்சு, பட்டு, கம்பளி ஆடைகளைச் செய்து அணிந்தனர். ஆடைகள் நாட்டுக்கு நாடு வேறாய் இருக்கும்.

சீனர், யப்பானியர் அதிகமாகப் பட்டு ஆடைகளை அணிவர். அங்கே மல்பெரி என்னும் செடியில் பட்டுப்பூச்சி வாழும். பட்டுப்பூச்சி பட்டுநூலைச் செய்யும்.

குளிர் உள்ள நாடுகளில் வசிப்பவர் கம்பளி ஆடைகளை அணிவர். கம்பளி ஆட்டின் மயிரைக் கத்தரித்துக் கம்பளி ஆடை செய்வர். கம்பளி ஆடை குளிரைத் தாங்கும்.

இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா முதலிய நாடுகள் சூடு உள்ள இடங்கள். இங்கே வசிப்பவர் பருத்தி ஆடைகளை அணிவர். பருத்திப் பஞ்சை முறுக்கி நூல் நூற்பர். நூலைக்

கொண்டு ஆடை நெசவு செய்வர். எகிப்து, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் அதிக பருத்தி உண்டாகிறது.

நாம் ஆடைகளை அணியும்போது சுகாதார விதிகளைக் கவனித்தல் வேண்டும். நாம் சுத்தமான ஆடைகளை அணிதல் வேண்டும். இறுக்கமான ஆடையும், அழுக்கான ஆடையும் உடம்புக்கு ஆகா.

"கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு"

## அப்பியாசம்

விடை தருக

1. நாம் ஏன் ஆடைகளை அணிகிறோம்?
2. ஆடைகளை எவற்றில் இருந்து செய்கிறார்கள்?
3. கம்பளி ஆடையை ஏன் அணிகிறார்கள்?
4. பட்டு எங்கே அதிகமாய் உண்டு?
5. பருத்தி உண்டாகும் நாடுகள் எவை?
6. ஆடையைப்பற்றி ஒரு பழமொழி எழுதுக.

## (ஊ) இலங்கையின் பழைய நகரங்கள்.

இக்காலத்தில் இலங்கையின் தலைநகரம் கொழும்பு. முற்காலத்தில் வேறு நகரங்கள் தலைநகரங்களாய் இருந்தன அவை பழைய நகரங்கள் எனப்படும். அவற்றைப் புராதன நகரங்கள் எனவும் கூறுவர். அவை அழகுகெட்டு அழிந்து கிடக்கும் நகரங்கள்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசர் இருந்தார்கள். அவர்கள் இருந்து அரசாண்ட இடம் நல்லூர். நல்லூரில் சங்கிலித்தோப்பு அரசர் இருந்த இடம். அது அழிந்து கிடக்கிறது.



சங்கிலித்தோப்பு

முற்காலத்தில் அநுரதபுரம், பொலநறுவை, சிகிரியா, சீதவாக்கை, கண்டி முதலிய இடங்கள் தலைநகரங்களாய் இருந்தன. அநுரதபுரத்தில் தமிழ் மன்னரும், சிங்கள மன்னரும் அரசாண்டனர். தமிழ் மன்னருள் எல்லாளன் சிறந்தவன் அவன் 44 ஆண்டுகள் நீதியுடன் அரசாண்டான்.

கைமுனு என்னும் சிங்கள மன்னன் வீரம் உள்ளவன். அவன் அநுரதபுரத்தில் விகாரை என்னும் கோயில்களையும் பெரிய அரண்மனைகளையும் கட்டினன்.



விகாரை



அழிந்த அரண்மனை




இலங்கையின் பழைய தலைநகரங்கள்



பொலநறுவைச் சிவன் கோயில்



மகா பராக்கிரமபாகு

அநுரதபுரத்தில் ஒரு பழைய அரசமரம் உண்டு. அது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நாட்டப்பட்டது. அநுரதபுரத்தில் சிங்கள மன்னர் குளங்களை வெட்டினார்கள். குளத்து நீரை வயல்களுக்குப் பாய்ச்ச வசதி செய்தார்கள்.

பொலநறுவையில் தமிழ்மன்னரும் சிங்கள மன்னரும் இருந்தார்கள், இராசராசன் என்னும் சோழன் வீரம் உள்ள தமிழ் அரசன். அவன் பெரிய சிவன் கோயிலைக் கட்டினான். அது அழிந்துபோனாலும் ஒருபகுதி அசையாமல் உள்ளது.

பராக்கிரமபாகு என்னும் சிங்கள மன்னன் பெரிய குளத்தைக் கட்டினான். அது பராக்கிரம சமுத்திரம் என்னும் பெயர்பெற்ற பெரிய குளம்.



சிகிரியாக் கற்பாறை

காசியப்பன் சிகிரியா என்னும் மலேயில் அரண்மனேயைக் கட்டினன். அங்கே அழகிய ஓவியங்களே வரையச் செய் தான்.

கண்டி மலேநாட்டில் உள்ள பெரிய நகரம். அதுவே இலங்கை மன்னரின் கடைசித் தலேநகரம். அங்கே கடைசியாக ஒரு தமிழ்மன்னன் அரசாண்டான். கண்டியில் புத்தர் பெரு மானின் புனிதப் பற்கோயில் உள்ளது.

## அப்பியாசம்

I. விடை எழுதுக.

1. யாழ்ப்பாணத்தின் பழைய தலைநகரம் எது ?
2. சங்கிலித்தோப்பு எங்கே உள்ளது ?
3. இலங்கையின் பழைய தலைநகரங்கள் எவை ?
4. அநுரதபுரத்தில் இருந்த தமிழ்மன்னன் யாவன் ?
5. பழைய அரசமரம் எங்கே உள்ளது ?
6. பொலநறுவையில் இருந்த தமிழ்மன்னன் யாவன் ?
7. பராக்கிரமபாகு என்ன செய்தான் ?
8. அழிந்த அரண்மனைகள் எங்கே உள்ளன ?

II. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதுக.

1. காசியப்பன் .................... வாழ்ந்தான்.
2. .. .......... ......... சுவர் ஓவியங்கள் உள்ளன.
3. ...................... மலைநாட்டில் உள்ளது.
4. ....................... புனித பற்கோயில் உண்டு.
5. இராசராசன் சிவாலயத்தைக் .................. ...
6. இலங்கையைத் தமிழரும் .................... ஆண்டனர்.

## (எ) நாகரிகம் வாய்ந்த நாடுகள்.

முந்திய பாடங்களில் வேடர், எஸ்கிமோஸ், பிக்மீஸ், செவ்விந்தியர் நாகரிகம் இல்லாத மக்கள் என்று படித்தோம். அவர்கள் சீர்திருத்தம் இல்லாதவர்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே சிலர் சீர்திருத்தம் அடைந்து வாழ்ந்தனர். அவர்களை நாகரிக மக்கள் என்று கூறுவர். அவர்கள் வாழ்ந்த நாடுகள் நாகரிகம் வாய்ந்த நாடுகள் எனப்படும்.

தமிழர் நாகரிகம்

தென்இந்தியா தமிழ்நாடு எனப்படும். அங்கே தமிழர் வாழ்ந்தனர். தமிழ்நாட்டில் காவிரி, வைகை முதலிய ஆற்றங் கரைகளில் தமிழர் குடியேறி நாகரிகம் உள்ளவராய் வாழ்ந் தனர். தமிழ்நாட்டில் சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மன்னர் ஆண்டு வந்தனர். வட இந்தியாவில் இந்து நதிக் கரையில் நாகரிகம் வாய்ந்த மக்கள் வாழ்ந்தனர்.

சீனர் நாகரிகம்

சீனு தேசம் பழைய நாகரிகம் வாய்ந்தது. சீனர் அச்சு இயந்திரம், பட்டு, காகிதத்தாள், பீங்கான் கோப்பை, சீன வெடி ஆகியவற்றை முதலிற் கண்டு பிடித்தனர். நீளமான மதிலைக் கட்டினர். சீனர் தேநீர் பருகவும், கற்பூரம் செய் யவும், திசையை அறியவும் முதலில் அறிந்தனர். சீனு தேசத் தில் குவாங்கோ, யங்ரிஸ்கியாங் முதலிய பெரிய ஆறுகள் உண்டு. அங்கே அதிகநெல் விளைகிறது.

பாபிலோனியரின் நாகரிகம்

பாபிலோனியா என்னும் நாட்டில் பாபிலோனியர் வாழ்ந் தனர். அங்கே கம்முரபி என்னும் மன்னன் அரசாண்டான். அவன் வலிமை உள்ளவன். அவன் பல சட்டங்களை இயற்றி ஞன். பாபிலோனியர் ஒழுங்காக வாழ்ந்தனர். அவர்கள் மாளிகைகளைக் கட்டினர். சூரியனை வணங்கினர். கணிதம், வானசாத்திரம் முதலிய பாடங்களை அறிந்தனர்.

எகிப்தியர் நாகரிகம்

ஆபிரிக்காவின் வடபகுதியில் நைல்நதி பாய்கிறது. அதன் கரைகளில் எசிப்தியர் நாகரிகம் வாய்ந்தவராய் வாழ்ந்தனர். அவர்கள் எழுதிப் படிக்க அறிந்தனர். பருத்தி ஆடையை

அணிந்தனர். பிறமிட் என்னும் பெரிய கோபுரங்களைக் கட்டினர்கள். தானியங்களை விளைவு செய்தார்கள்.

இரேக்கர் நாகரிகம்

இரேக்கர் கிறீஸ் தேசத்தில் வாழ்ந்தனர். அவர்கள் பெரிய அறிவாளிகள். அவர்கள் பல கலைகளையும் கற்றனர். அழகை விரும்பினர்கள். அவர்கள் வீரம் உள்ளவர்கள். அவர்கள் உடற்பயிற்சி செய்தனர். அங்கே சிற்பிகள் அழகிய உருவங்களைச் செய்தனர்.

உரோமர் நாகரிகம்

ஐரோப்பாக் கண்டத்தில் இத்தாலி என்றொரு நாடு உண்டு. அங்கே உரோம் என்றொரு நகரம் உள்ளது. உரோம்நகரில் உரோமர் வாழ்ந்தனர். அவர்கள் நாகரிகம் வாய்ந்தவர். அவர்கள் பல நாடுகளை வென்று பெரிய அரசை அமைத்தனர்.

உரோமர் லத்தீன் மொழியைப் பேசினர். அறிவு நூல்களை எழுதினர். அழகிய மாளிகைகளைக் கட்டினர். வீதிகளையும், கோட்டைகளையும் கோயில்களையும் அமைத்தனர்.

அவர்கள் பட்டுஆடை அணிவதில் விருப்பம் உள்ளவர். அவர்கள் கிறிஸ்தவ சமயத்தை எங்கும் பரப்பினர்.

இரேக்கரையும் உரோமரையும் யவனர் என்று தமிழர் அழைத்தனர். அவர்கள் தமிழ்நாட்டில் வியாபாரஞ் செய்தனர்.

## அப்பியாசம்

1. *சீர்திருத்தம் இல்லாத மக்கள் யாவர் ?*
2. *பழைய நாகரிகம் வாய்ந்த மக்கள் யாவர் ?*

3. தமிழர் எங்கே குடியேறினர் ?
4. மூவேந்தர் என்பவர் யாவர் ?
5. தமிழ்நாட்டில் உள்ள நதிகள் எவை ?
6. வடநாட்டில் உள்ள நதி எது ?
7. சீனர் கண்ட நூதனப் பொருள்கள் எவை ?
8. பாபிலோனிய மன்னன் யாவன் ?
9. எகிப்து எங்கே உள்ளது ?
10. எகிப்தில் பாயும் ஆறு எது ?
11. கிரேக்கர் எங்கே வாழ்ந்தனர் ?
12. உரோமரின் மொழி யாது ?

## (ஏ) எங்கள் அரசாங்கம்.

எங்கள் நாடு இலங்கை. இதை ஸ்ரீ லங்கா என்று கூறுவர். இலங்கையைத் தமிழ்மன்னரும் சிங்களமன்னரும் ஆண்டனர். பின்னர் ஐரோப்பியர் சிலகாலம் எங்கள் நாட்டை ஆண்டனர். முதலில் போத்துக்கேயரும் பின்னர் ஒல்லாந்தரும், அவருக்குப் பின்னர் ஆங்கிலேயரும் ஆண்டனர்.

ஆங்கிலேய ஆட்சியின் பின் இலங்கை சுதந்திரம் பெற்றது. சுதந்திரம் பெறுவதற்கு இராமநாதன், அருணசலம், சேனநாயக, பண்டாரநாயக என்போர் பாடுபட்டனர். இன்று இலங்கை ஒரு சுதந்திர நாடு. எங்கள் இலங்கையை நாங்களே ஆளுகிறேம். கொழும்பிலே தேசியப் பேரவை உள்ளது.

தேசியப் பேரவையில் எங்கள் பிரதிநிதிகள் கூடுவர். அவர்கள் நாட்டுக்கு வேண்டிய அலுவல்களை அங்கே பேசுவர். அரசாங்கத்தின் தலைவர் பிரதம மந்திரி. அவருடைய பெயர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக. அவருக்கு உதவியாக வேறு மந்திரிமார் இருக்கிறார்கள்.



தேசியப் பேரவை மன்றம்



பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக

## அப்பியாசம

1. இலங்கையின் வேறுபெயர் என்ன ?
2. இலங்கையை ஆண்ட ஐரோப்பியர் யாவர் ?
3. தேசியப் பேரவை எங்கே உள்ளது ?
4. இலங்கை சுதந்திரம் பெறப்பாடுபட்டவர் யாவர் ?
5. உங்கள் தொகுதியின் பிரதிநிதி யாவர் ?
6. நாட்டின் பிரதம மந்திரியார் யாவர் ?

பாடம் ஆறு

## (அ) நல்ல பிள்ளை

கண்ணன் ஒரு சிறுவன். அவன் நாவலர் பாடசாலையில் இரண்டாம் வகுப்பிற் படிக்கிறான். அவன் நல்ல பிள்ளை. அவன் அப்பாவின் சொற் கேட்டு நடப்பான். அவன் அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி எல்லோரிடமும் அன்புள்ளவன். அவன் இனிய வார்த்தை பேசுவான்.

கண்ணன் ஒழுங்காகப் பாடசாலைக்குப் போவான். அவன் புத்தகங்களை அழுக்குப் படியாமலும், கிழிக்காமலும் வைத்திருக்கிறான். அவன் பிள்ளைகளுடன் சண்டை பிடிக்க மாட்டான். அவன் நாய்களுக்குக் கல் எறிவதில்லை.

கண்ணன் படிப்பிற் கெட்டி. அவன் மாலையில் வீட்டு முற்றத்தில் விளையாடுவான். ஓய்வு நேரத்தில் சித்திரம் வரைவான். அவன் காலையிலும் மாலையிலும் கடவுளை வணங்குவான்.

## (ஆ) மரியாதைப் பழக்கம்.

கண்ணன் நல்லபிள்ளை என்று படித்தோம். பெரியவர்கள் அவன் வீட்டுக்கு வந்தால் அவரை, "வாருங்கள் வணக்கம்" என்று நல்வரவு கூறுவான். பெரியவர்கள், "இரு தம்பி" என்று சொன்ன பின்பே இருப்பான்.

பெரியவர்களிடம் ஏதாவது கொடுக்கும் போது இரண்டு கைகளாலும் கொடுப்பான். பெரியவர் தரும் பொருளை இரண்டு கைகளாலும் வாங்குவான்.

பிறர் ஏதாவது உதவி செய்தால், "மெத்தப் பெரிய உபகாரம் நன்றி" என்று கூறுவான். தான் ஏதாவது குற்றஞ் செய்தால், "தயவு செய்து நான் செய்த பிழையை மன்னித்து விடுங்கள்" என்று கேட்பான்.

கண்ணன் பிறருடைய பொருள்களை எடுக்கமாட்டான். பாடசாலைத் தூணிலாவது சுவரிலாவது அழுக்குப்படுத்த மாட்டான். வகுப்பு அறையில் குப்பை போட மாட்டான்.

## (இ) நல்லன செய்.

1. கடவுளை வணங்கு.
2. தந்தை தாயை வணங்கு
3. உண்மை பேசு.
4. உத்தமனாய் இரு.
5. பாடங்களைக் கவனமாய்ப் படி.
6. இனியவார்த்தை பேசு.
7. அன்புள்ள பிள்ளையாய் இரு.
8. ஏழைகள் மீது இரங்கு.
9. பெரியவரைக் கண்டால் வணங்கு.
10. ஆசிரியருக்கு அமைந்து நட.
11. பிறரை மதித்து நட.
12. பிறர் செய்த உதவியை நினை.

## (ஈ) நல்ல பழக்கம்.

1. காலையில் நித்திரை விட்டு எழு.
2. காலைக் கடமையை முடி.

3. பல்லை நன்றாக விளக்கு.
4. நல்ல நீரில் குளி.
5. சுத்தமான உடையை உடு.
6. சத்துள்ள உணவை உண்.
7. கொதித்து ஆறிய நீரைக் குடி.
8. நேரத்தோடு பாடசாலைக்குப் போ.
9. பாடங்களை நன்றாகப் படி.
10. வியர்வை சிந்த விளையாடு.
11. எதனையும் குறித்த நேரத்தில் செய்.
12. மனமகிழ்ச்சியோடு இரு.

## (உ) நல்ல ஒழுக்கம்.

1. ஒரு நாளும் பொய்சொல்லாதே.
2. ஓர் உயிரையுங் கொல்லாதே.
3. ஒருவரையும் நிந்தியாதே.
4. ஒருநாளும் கள்ளுக்குடியாதே.
5. பிறர் பொருளைக் களவு செய்யாதே.
6. பிறர் பொருளை விரும்பாதே.
7. பிறர்குறைகளைப் பேசாதே.
8. கெட்ட பிள்ளைகளுடன் கூடாதே.
9. வீண்நேரம் போக்காதே.
10. படிக்கிற நேரத்தில் விளையாடாதே.
11. புத்தகத்தைக் கிழித்துப் போடாதே.
12. பிறர்மீது கோபம் கொள்ளாதே.

## (ஊ) சுகாதாரப் பழக்கம்.

1. அழுக்கு ஆடையை அணியாதே.
2. நகத்தைப் பற்களால் கடியாதே.
3. அழுகிய பழங்களைப் புசியாதே.
4. அதிக உறைப்பைத் தின்னாதே.
5. நின்றுகொண்டு போசனம் பண்ணாதே.
6. புகையிலைச் சுருட்டுப் பிடியாதே.
7. கண்ட இடத்தில் எச்சில் துப்பாதே.
8. பிறர் மத்தியில் மூக்கு நீர் சிந்தாதே.
9. வழி தெருவில் மலசலம் கழியாதே.
10. பூச்சி புழுக்களைத் தொடாதே.
11. கூரான ஆயுதங்களைத் தொடாதே.
12. மிருகங்களுக்குக் கிட்டப் போகாதே.
13. வாயினால் மூச்சு விடாதே.
14. விளக்கை வாயினால் அவியாதே.
15. பகலில் நித்திரை செய்யாதே.

## (எ) சுக வாழ்வு

நாங்கள் சுக வாழ்வு வாழ்தல் வேண்டும். தேக சுகம் இல்லாவிட்டால் கல்வி, செல்வம் ஆகியவற்றால் பயன்இல்லை. தேகம் சுகம் பெறுவதற்கு நாம் சுகாதார முறைகளை அறிந்து நடத்தல் வேண்டும்.

நாம் நல்ல காற்றை மூக்கினாற் சுவாசித்தல் வேண்டும். நல்ல காற்று எமது இரத்தத்தைச் சுத்தஞ் செய்கிறது.

கடற்கரை, திறந்தவெளி, மலையடிவாரம் ஆகிய இடங்களில் நல்ல காற்று உண்டு. அங்கே உலாவுதல் உடம்புக்கு மிகவும் நல்லது.

நமது வீட்டுக்குள் நல்ல காற்று வருதல் வேண்டும். அதற்காகவே நாங்கள் யன்னல்களை அமைக்கிறோம்.

சூரிய வெளிச்சம் உடம்புக்கு நல்லது. சூரிய ஒளி நோய்க் கிருமிகளைக் கொல்லும். நம் ஆடைகள், படுக்கைகள், தலையணைகள் ஆகியவற்றை வெயிலில் வைத்து எடுத்தல் நன்று.

நாம் பருகும் நீர் சுத்தமாய் இருத்தல் வேண்டும். கொதித்து ஆறிய நீரை வடித்துப் பருகுதல் நல்லது.

அசுத்த நீரைப்பருகுவதால் வயிற்றுளைவு, நெருப்புக் காய்ச்சல் முதலிய நோய்கள் உண்டாகும்.

நாம் உண்ணும் உணவு சத்துள்ளதாயும், சுவை உள்ளதாயும் இருத்தல் வேண்டும். உணவைச் சமைப்பதால் அது சுவை பெறுகிறது.

பால், முட்டை என்பன சிறந்த உணவுகள். சோறு, மரக்கறி, இறைச்சி, வெண்ணெய், பழங்கள், கிழங்கு என்பன நல்ல உணவு வகைகள். நாம் ஒருநாளில் மூன்று வேளைகளில் உணவு உண்டால் போதுமானது. நாம் உணவு உண்ணும்போது மனமகிழ்ச்சியுடன் இருத்தல் நன்று.

## அப்பியாசம்

1. நல்லகாற்று எங்கே உள்ளது ?
2. நல்ல காற்றின் உபயோகம் என்ன ?
3. வீட்டுக்கு ஏன் யன்னல் அமைக்கிறார்கள் ?

4. சூரிய வெளிச்சத்தின் உபயோகம் என்ன ?
5. நாம் எப்படியான நீரைப் பருகுதல் நல்லது ?
6. கெட்ட நீரால் உண்டாகும் நோய்கள் எவை ?
7. நல்ல உணவுகள் எவை ?
8. நாம் ஒருநாளில் எத்தனை தரம் உண்ணல் நல்லது ?

## (ஏ) தேக அப்பியாசமும் நித்திரையும்

எமது உடம்பு உறுதி உள்ளதாய் இருத்தல் வேண்டும். உடம்பு உறுதிபெற நாம் ஒழுங்காகத் தேகஅப்பியாசம் செய்தல் வேண்டும். திறந்த வெளிகளில் கல், முள் இல்லாத இடத்தில் அப்பியாசம் செய்தல் நல்லது. மாலை வேளையில் ஒழுங்காக அப்பியாசஞ் செய்தல் நல்ல பழக்கம். நல்ல விளையாட்டுக்கள் உடம்புக்கு உறுதியைத் தருவன.

விளையாடும்போது வெயர்வை உண்டாகும். வெயர்வை மூலம் உடம்பில் உள்ள அழுக்கு வெளியேறும். உடம்பு வலிமை பெறுகிறது. உடம்பில் உள்ள உறுப்புக்கள் உறுதி அடைகின்றன. இரத்தம் சுத்தமாகிறது.

நாம் ஒற்றுமையாய் விளையாடுதல் வேண்டும். விளையாடும்போதும் பொய் பேசுதல் ஆகாது.

வேலைசெய்யும் உடம்புக்கு ஆறுதல் வேண்டும். பாடசாலையில் ஆறுதல் வேளை உண்டு. ஆறுதல் வேளையில் உடம்பும் மனமும் அமைதியாய் இருக்கும்.

இரவில் நாம் நித்திரை செய்கிறோம். அது பெரிய ஆறுதல் வேளை. நித்திரையினால் உடம்பு ஆறுதல் அடைகிறது. எமது மூளை வலிமை அடைகிறது. சிறுவர்கள் ஒன்பது மணி நேரம் நித்திரை செய்தல் நல்லது.

## அப்பியாசம்

1. தேகஅப்பியாசம் செய்ய நல்லஇடம் எது ?
2. வெயர்வை உண்டாவதால் என்ன நடக்கிறது ?
3. தேகஅப்பியாசத்தால் உண்டாகும் நன்மைகள் எவை ?
4. நித்திரையால் உறுதிபெறும் உறுப்பு எது ?
5. நாம் எப்போது நித்திரை செய்கிறோம் ?

## பாடம் ஏழு.

## மிருகங்கள்

## (அ) குதிரை

மிருகங்களை விலங்குகள் என்றும் கூறுவர். மிருகங்கள் வீட்டிலும் காட்டிலும் வாழும். வீட்டில் வளர்வன வீட்டு மிருகங்கள். காட்டில் வாழ்வன காட்டு மிருகங்கள்.

குதிரை அழகான மிருகம் அது பலம் உள்ள மிருகம். அது வண்டி இழுக்கவும், சவாரி செய்யவும், வயல் உழவும் உதவியாய் உள்ளது.

குதிரை வேகமாகத் தாவி ஓடும். அதன் கால்கள் உறுதியானவை. கால்களில் உறுதியான குளம்புகள் உண்டு. குதிரையின் கழுத்து வளைந்து கொடுப்பதால் அது புல்லை மேய்கிறது. குதிரையின் கழுத்தில் பிடரி மயிர் உண்டு.

குதிரையின் வாலில் நீண்டமயிர் உண்டு. குதிரைவால் அழகாகத் தொங்கும். அதனால் அது ஈ, நுளம்பு முதலிய பூச்சிகளைத் துரத்தும்.



குதிரை



தாவி ஓடும் குதிரை

குதிரை புல், கொள்ளு, கடலை முதலிய உணவுகளை விரும்பித் தின்னும். அரேபியா, ருசியா ஆகிய நாடுகளில் உள்ள குதிரைகள் அழகானவை. அவை அதிக வலிமை உள்ளவை.

## அப்பியாசம்

1. வீட்டு மிருகங்கள் எவை ?
2. காட்டு மிருகங்கள் எவை ?
3. வண்டி இழுக்கும் மிருகங்கள் எவை ?
4. இறைச்சி தின்னும் மிருகங்கள் எவவ ?
5. புல் தின்னும் மிருகங்கள் எவை ?
6. கொம்புள்ள மிருகங்கள் எவை ?
7. கூரிய நகங்கள் உள்ள மிருகங்கள் எவை ?
8. பால்தரும் மிருகங்கள் எவை ?

9. குதிரையின் உபயோகம் என்ன ?

10. குதிரையின் உணவு என்ன ?

11. அதன் வால் எப்படியானது ?

## (ஆ) கழுதை

கழுதை குதிரை இனத்தைச் சேர்ந்தது. ஆனால் அது அழகாய் இருக்காது. கழுதை சாம்பல் நிறம் உள்ளது. அதன் உடம்பில் அடர்ந்த மயிர் உண்டு. அதன் காதுகள் நிமிர்ந்து இருக்கும்.

கழுதை அதிக புல்லைத் தின்னும். அதற்கு உணவில் அதிக விருப்பம் உண்டு. அது சுத்தமான நீரையே குடிக்கும்.

கழுதை நன்றாகப் பொதி சுமக்கும். அது கோபம் வந்தால் காலால் உதைக்கும். பல்லால் கடிக்கும். அவலமாகக் கத்தும்.

பெண்கழுதை குட்டி ஈனும். கழுதைக் குட்டி இளமையில் அழகாய் இருக்கும். கழுதைப்பால் மருந்துக்கு உதவும்.

### அப்பியாசம்

1. கழுதையின் உபயோகம் என்ன ?

2. அதன் உணவு என்ன ?

3. கழுதைகோபம் வந்தால் என்ன செய்யும் ?

4. கழுதைக்கும் குதிரைக்கும் என்ன வித்தியாசம் ?

## (இ) எருமை.

எருமை மாட்டு இனத்தைச் சேர்ந்தது. அது மாட்டை விடப் பெரியது. அது முரட்டுத்தனம் உள்ளது. மந்த குணம் கொண்டது.

எருமை கறுப்பு நிறம் உள்ளது. அதன் தோல் தடிப்பானது. ஆனால் அது சூட்டைத் தாங்கமாட்டாது. ஆகவே அது குளத்துச் சேற்றிற் கிடக்க விரும்புகிறது.



எருமை

எருமையின் கொம்புகள் வளைந்து இருக்கும். அவை உறுதியாய் இருக்கும். அதன் காலில் உள்ள குளம்புகள் பிளவுபட்டவை. அவை உறுதியானவை.

பெண் எருமை கன்று ஈனும். அது அதிக பால் தரும். எருமைப்பால் தடிப்பானது. அதிலே அதிக வெண்ணெய் உண்டு.

எருமைக்கடா பல வேலைகளைச் செய்யும். அது வண்டி இழுக்கவும், வயல் உழவும் உதவுகிறது.

எருமைத் தோலால் செருப்பு முதலியன செய்வர். அதன் கொம்பினால் சீப்பு, கத்திப்பிடி செய்வர்.

எருமை வவுனியா, மட்டக்களப்பு முதலிய பகுதிகளில் அதிகமாக உண்டு.

## அப்பியாசம்

1. எருமை எப்படியான மிருகம் ?
2. அதன் தோல் எப்படியானது ?
3. அது சேற்றிற் கிடப்பது ஏன் ?
4. எருமையின் உணவு என்ன ?
5. எருமையின் உபயோகம் என்ன ?

## (ஈ) யானை

யானை பெரிய மிருகம். அது காட்டில் வாழும். அது புகை நிறம் உள்ளது. அதன் கால்கள் தூண்களைப்போலப் பெரியவை.

யானையின் காதுகள் பெரியவை. அதன் கண்கள் சிறியவை. அதன் மூக்கு நீளமானது. அது முன்னால் தொங்கி ஆடும். அதைத் தும்பிக்கை என்று கூறுவர்.



யானை

யானை தும்பிக்கையால் வேலைசெய்யும். மரங்களை முறித்து விழுத்தும். தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கும்.

யானைக்கு நீண்ட தந்தங்கள் உண்டு. அவை வெள்ளை நிறம் உள்ளவை. அதிக விலை உள்ளவை.

யானை தாவர உணவை உண்ணும். பழங்கள், தேங்காய், கரும்பு இவற்றை விரும்பி உண்ணும். காட்டு யானை மூர்க்கம் உள்ளது.

## அப்பியாசம்

கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதுக.

1. *யானை ................ நிறம் .....................*
2. *யானையின் மூக்கு .................... எனப்படும்.*
3. *யானை ...................... உணவை ..................*
4. *காட்டு யானை .................. உள்ளது.*
5. *.................... யானை ............ உள்ளது.*

விடுகதை : *கறுத்த பாறையில் வெள்ளை வேர். அது என்ன?*

## (உ) அணில்



அணில் சாதுவான பிராணி. அது சாம்பல் நிறம் உள்ளது. அதன் முதுகில் மூன்று கோடுகள் இருக்கும்.

அணில் அச்சம் உள்ள பிராணி. அது தாவிப் பாயும். அதன் கால் நகங்கள் கூரானவை. அது பின்னங் கால் களில் குந்தி இருக்கும்.

அணில் முன்னங் கால்களால் பூ, பிஞ்சு, காய், கனி பறித்துத் தின்னும். அது மரக்கிளைகளிலும் வீட்டுக் கூரை யிலும் கூடு கட்டி வாழும். அது கீச் கீச் என்று கத்தும்.

## அப்பியாசம்

1. அணிலின் நிறம் என்ன ?
2. அது எங்கே கூடு கட்டும் ?
3. அது எப்படிச் சத்தம் போடும் ?
4. அணில் செய்யும் தீமை என்ன ?

விடுகதை : குதித்துக் குதித்து ஓடிடுவான்
குறிதவறுமல் பாய்ந்திடுவான்
முதுகில் மூன்று கோடுடையான்
முன்னும் பின்னும் மரம் ஏறிடுவான்.

## (ஊ) வெளவால்.

வெளவால் நூதனமான உயிரினம். அது பறக்கும். அதற்குக் குடைச்சீலை போன்ற செட்டை உண்டு. அது குட்டி

ஈன்று பால் கொடுக்கும். அதனால் அதனைப் பறக்கும் பாலூட்டி என்பர்.



வௌவால்

வௌவால் இரவிலே பறக்கும். அது பழங்களைத் தேடித் தின்னும். அது பூச்சி, புழு, வண்டு, தவளை ஆகிய பிராணிகளைத் தின்னும். அதற்குப் பற்கள் உள்ளன.

## அப்பியாசம்

1. *வௌவாலின் செட்டை எப்படியானது?*
2. *அதன் உணவு என்ன?*
3. *அது இரை தேடுவது எப்போது?*
4. *பல் உள்ள பறவை எது?*
5. *குட்டி ஈனும் பறவை எது?*

பாடம் எட்டு.

பறவைகள்.

## (அ) ஆந்தை.

ஆந்தை இரவில் இரைதேடும் பறவை. அதன் கண்கள் பெரியவை. அதற்கு இரவிலே கண்தெரியும். அதற்குப் பகலிலே கண்தெரியாது. அது பகலில் மரப்பொந்துகளில் வசிக்கும்.

ஆந்தையின் இறகுகள் மென்மை ஆனவை. அது பறக்கும்போது சத்தம் கேட்பதில்லை. ஆந்தைக்கு இரவில் பலம் அதிகம்.

ஆந்தையின் அலகுகளும், கால்நகங்களும் கூரானவை. அது புழு, பூச்சி, எலி, ஓணன் ஆகியவற்றைப் பிடித்துத் தின்னும்.

## அப்பியாசம்

1. ஆந்தையின் கண்கள் எப்படியானவை ?
2. அது எங்கே வாழும் ?
3. அது ஏன் பகலில் வெளியே வருவதில்லை ?
4. ஆந்தையின் இறகுகள் எப்படியானவை ?
5. ஆந்தையின் உணவு என்ன ?

## (ஆ) மரங்கொத்தி.



மரங்கொத்தி

மரங்கொத்தி ஒரு பறவை. அதன் தலையில் சிவப்பு நிறக் கொண்டை உண்டு. அதன் தலையில் கறுப்பு. வெள்ளை நிறமுள்ள இறகுகள் உண்டு. அதன் உடம்பில் பொன் நிறமான இறகுகள் உண்டு.

மரங்கொத்தி மரம் ஏறும். அதன் வால் தடிப்பானது. அதனால் அது மரத்தில் குந்தி இருக்கும். அது மரத்தைக் கொத்திப் பொந்து உண்டாக்கும். மரத்தில் உள்ள புழு, வண்டு ஆகியவற்றை உண்ணும். அதனால் கமக்காரனுக்கு நன்மை உண்டாகிறது.

## அப்பியாசம்

1. மரங்கொத்தியின் கொண்டை என்ன நிறம்?
2. பொன் நிற இறகுகள் எங்கே உண்டு?
3. மரங்கொத்தியின் வால் எப்படியானது?
4. அதன் உணவு என்ன?

## (இ) வாத்து.

வாத்து நிலத்திலும் நீரிலும் வாழும். அது பறவையாய் இருந்தும் பறப்பது இல்லை. அது நீரில் கிடக்கும்போது, அதன் உடலில் தண்ணீர் ஒட்டுவதில்லை. அதன் இறகுகள் படகுபோலக் குவிந்து இருக்கும். அதனால் வாத்து அழகாக நீந்துகிறது. அதன் கால்கள் சேற்றில் புதைவது இல்லை.


வாத்து

வாத்தின் கழுத்து நீளமானது. அதன் அலகுகள் தட்டையானவை. வாத்தின் வாயில் சிப்புப் போன்ற பற்கள் உண்டு.

வாத்து பூச்சி, புழு, நண்டு, நத்தை ஆகியவற்றை உண்ணும். அது முட்டை இடும். ஆனால் அதற்கு அடைகாக்கத் தெரியாது. அது குவா குவா என்று கத்தும். வாத்தை முட்டைக்காகவும் இறைச்சிக்காகவும் சிலர் வளர்க்கிறார்கள்.

## அப்பியாசம்

1. வாத்து எங்கே வசிக்கிறது ?
2. அதன் இறகுகள் எப்படியானவை ?
3. அதன் கழுத்து எப்படியானது ?
4. வாத்தின் உணவு என்ன ?
5. வாத்தை ஏன் வளர்க்கிறார்கள் ?

விடுகதை: நீந்தத் தெரியும் மீனும் அல்ல
நடக்கத் தெரியும் மனிதன் அல்ல
இறகுகள் கொண்ட ஒரு பறவை
இறகு கொண்டு பறக்காது.

## (ஈ) மீன்கொத்திக் குருவி

இது ஒரு சிறிய பறவை. இதன் கால்களும் வாலும் சிறியவை. இதன் தலைப்பாகம் சிவப்பு நிறம். அதிலே வெள்ளைக் கோடுகள் உள்ளன. இதன் இறகுகள் பச்சையும் நீலமும் கலந்து உள்ளன.

இப்பறவை நீர் நிலைகளின் கரையில் வாழும். அங்கே உள்ள மீனைப் பிடித்து உண்ணும். இது மீனையே உணவாகக் கொள்வதால் மீன்கொத்திக் குருவி எனப்படும்.

## அப்பியாசம்

1. மீன்கொத்திக் குருவி எங்கே வசிக்கிறது ?
2. அதன் உணவு என்ன ?
3. அதன் இறகுகள் எப்படியானவை ?

## பூச்சிகள்

## (உ) வண்ணத்துப்பூச்சி



வண்ணத்துப்பூச்சி

வண்ணத்துப் பூச்சி அழகானது. அது பூக்களில் தேன் பருகும். அதன் உடல் மூன்று பகுதிகளாய் உள்ளது.

வண்ணத்துப் பூச்சிக்கு ஆறு கால்கள் உள்ளன. அதற்கு நான்கு செட்டைகள் உண்டு. செட்டைகள் மிகவும் மெல்லியவை. அவை மஞ்சள் நீலம், கறுப்பு, வெள்ளை ஆகிய நிறங்களில் உள்ளவை.

வண்ணத்துப்பூச்சி கார்த்திகை மாதத்தில் அதிகமாய்ப் பறந்து திரியும்.

## அப்பியாசம்

1. வண்ணத்துப் பூச்சிக்கு எத்தனை கால்கள் ?
2. அதற்கு எத்தனை செட்டைகள் ?
3. அதன் செட்டைகளின் நிறம் என்ன ?
4. வண்ணத்துப் பூச்சியின் உணவு என்ன ?
5. அது எக்காலத்தில் அதிகமாய்ப் பறக்கும் ?

## (௨௰) தேனீ.

தேனீ கூட்டம் கூட்டமாய் வாழும். அவை மரத்தின் கிளைகளிலும் பொந்துகளிலும் கூடு கட்டும். தேன்கூட்டில் பல அறைகள் உள்ளன. அவற்றில் பலஆயிரம் தேனீக்கள் வாழும். அவை ரீங்காரஞ் செய்யும்.



தேன்கூடு

தேனீக்களுக்கு ஒரு தலைவி உண்டு. அது இராணி ஈ எனப்படும். அது முட்டை இடும். தேன் கூட்டில் உள்ள ஆண் ஈக்கள் வேலை செய்வதில்லை. அவை சோம்பேறி ஈக்கள் எனப்படும்.

தேன் கூட்டிலே வேலைக்கார ஈக்கள் உள்ளன. அவை கூடுகட்டுதல், மலர்களில் தேன் எடுத்தல். இராணி ஈக்கு உணவு கொடுத்தல். தேன் கூட்டைக் காவல் செய்தல் ஆகிய பல வேலைகளைச் செய்யும்.

தேன் இனிக்கும். அது மருந்துக்கு உதவும். அது உடம்புக்கு மிகவும் நல்லது.

### அப்பியாசம்

1. *தேனீக்கள் எப்படி வாழும்?*
2. *அவை எங்கே கூடுகட்டும்?*
3. *சோம்பேறி ஈக்கள் என்ன செய்யும்?*
4. *வேலைக்கார ஈக்கள் என்ன செய்யும்?*
5. *தேனீ எங்கே தேன் எடுக்கும்?*
6. *தேன் கூட்டின் தலைவி யார்?*
7. *தேனின் உபயோகம் என்ன?*

**விடுகதை:** *எட்டாக் கொப்பிலே இனிப்புப் பொட்டலம்.*

## பாடம் ஒன்பது

## இயற்கையின் அற்புதம்

### (அ) சூரியன்.

பொழுதே! பொழுதே ! கிளம்பி வா !
பூமியில் இருளைப் போக்க வா !
தொழுதேன் தொழுதேன் எழுந்து வா !
சூரிய மணியே விரைந்து வா !

உன்னா லேஒளி உண்டாகும்
உன்னா லேபகல் உண்டாகும்
உன்னொளி கண்டால் மகிழ்வோமே
உனைமிக அன்பாய் புகழ்வோமே.

பறவை களெல்லாம் விழித்தனவே
பாட்டுகள் பாடிக் களித்தனவே
சிறுவர்கள் நாமும் பாடிடவே
தெளிந்து வாவினை யாடிடவே.

— முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி.

### (ஆ) சந்திரன்.

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா — பின்னர்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா !
என்ன அதிசயம் பாராயம்மா — ஈதோர்
இந்திர சாலமோ கூறுயம்மா !

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா — உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா!
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா — கண்ணில்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா!

— கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை.

விடுகதை: 1. ஒருகிண்ணம் சந்தனம் ஊரெல்லாம் கலியாணம்.
2. விரிந்த ஏரியிலே வெள்ளிக் கிண்ணி மிதக்கிறது.

## அப்பியாசம்

1. வானத்தில் நீர் காண்பன எவை?
2. சூரியன் எத்திசையில் உதிக்கும்?
3. அது எத்திசையில் மறையும்?
4. சூரியன் எமக்கு என்ன தருகிறது?
5. சந்திரனை எந்நேரத்தில் காணலாம்?
6. அதன் ஒளிக்குப் பெயர் என்ன?
7. பிறைச்சந்திரன் எப்படித் தோன்றும்?
8. முழுச்சந்திரன் எப்படித்தோன்றும்?
9. சந்திரன் சற்றுந் தெரியாமற் போகும் நாள் எது?
10. வானம் எங்கும் உள்ள புள்ளிகள் எவை?
11. நட்சத்திரங்களை நாம் எங்ஙனம் கூறுகிறோம்?

## (இ) வானவில்.

எத்தனை வண்ணம் வானவில் தன்னில்
எத்தனை வண்ணம் பார்
பத்தரை மாற்றுப் பசும்பொன் நிறமும்
பச்சையும் சிவப்பும் பார்.

நீலம் நல்ல கத்தரிப் பூ நிறமும்
நிறைந்திடும் வில்லைப் பார்.
கோலம் போட்டு வைத்தது போலக்
குவிந்திடும் வில்லைப் பார்.

— செல்ல கணபதி.

## (ஈ) மழை பெய்தல்.

வானம் கறுத்தால் மழை பெய்யும்
மழை பெய்தால் மண் குளிரும்
மண் குளிர்ந்தால் புல் தழைக்கும்
புல் தழைத்தால் பசு மேயும்
பசு மேய்ந்தால் பால் சுரக்கும்
பால் சுரந்தால் கன்று குடிக்கும்
கன்று குடித்து மிஞ்சியதைக்
கறந்து கொண்டு வந்திடலாம்
காப்பியில் விட்டுக் குடித்திடலாம்.

— கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை.

விடுகதை: 1. வெள்ளையாய் இருப்பான், கறுப்பாய் மாறுவான், தன்னையும் அறியாமல் தண்ணீராவன்.

2. ஆகாயத்துக்கும் பூமிக்கும் ஆயிரம் ஆயிரம் கம்பிகள். அந்தரத்திலே தொங்கி வழியும் அந்த அழகு என்ன?

## (உ) கருங்கடல்

ஊஞ்சல் போல முன்னும் பின்னும்
கருங்கடலே — நீயும்
ஓடி ஓடி வந்து போவாய்
பெருங்கடலே !

நீல வர்ண மேகந் தானே
கருங்கடலே — இங்கே
நிழலை உன்மேல் வீசியதோ
பெருங்கடலே!

கரையில் மண்ணை நீயே சேர்த்தாய்
கருங்கடலே - அதனைக்
கடந்து செல்ல முயல்வ தேனோ
பெருங்கடலே!

காற்றைத் தந்து மகிழ்ச்சி ஊட்டும்
கருங்கடலே - நாங்கள்
கரையை நோக்கி வரவே செய்யும்
பெருங்கடலே.

உப்புத் தந்தே உணர்வளிக்கும்
கருங்கடலே - நாங்கள்
உன்னை என்றும் மறந்தி டோமே
பெருங்கடலே.

-- *அழ. வள்ளியப்பா*

**விடுகதை:** *எழுந்து விழுந்து தாவிடும்*
*இரவும் பகலும் இரைந்திடும்.*

## (ஊ) தாவரம்

புல், பூண்டு, செடி, கொடி, மரம் என்பன தாவரம் எனப்படும். தாவரம் பூமியில் முளைத்து வளரும்.

மழை பெய்தால் மண் குளிரும் மண் குளிர்ந்தால் மரம் வளரும். மரம் பூக்கும். பூ காயாகும், காய்கனிந்து பழமாகும்.

தாவரம் நமக்கு உபயோகம் உள்ளவை. தாவரத்தின் இலை, பூ, காய், கனி, பட்டை, வேர் எமக்கு உபயோகம் உள்ளவை.

எங்கள் வீட்டு வளவில் பலவிதமான மரங்கள் உள்ளன. காட்டில் அதிக மரங்கள் உள்ளன. அவை யாவும் எமக்கு மிகவும் உபயோகம் உள்ளவை.

## (எ) மாமரம்



மா மரம்

மா மரம் பெரிதாய் வளரும். அதற்குக் கிளைகள் உண்டு. கிளைகளில் இலைகள் உள்ளன. இலைகள் அழகாய்த் தொங்கும்

மா மரம் கொத்துக் கொத்தாகப் பூக்கும். பூக்களில் இருந்து பிஞ்சுகள் உண்டாகும்.

மாம்பிஞ்சு முற்றிக் காயாகும். காய் கனிந்து பழமாகும். மாம்பிஞ்சு துவர்ப்பாய் இருக்கும். மாங்காய் புளிப்பாய் இருக்கும். மாம்பழம் இனிப்பாய் இருக்கும்.

மா மரத்தில் பல இனங்கள் உண்டு. அவை செம்பாட்டான், அம்பலவி, கறுத்தக்கொழும்பான், வெள்ளைக்கொழும்பான், மல்கோவா என்பன.

## அப்பியாசம்

1. புல்லின் நிறம் என்ன ?
2. புல்லின் உபயோகம் என்ன ?
3. பூப் பூக்கும் செடிகள் எவை ?
4. பூக்கும் கொடிகள் எவை ?
5. காய்கறிகள் காய்க்கும் கொடிகள் எவை ?
6. வீட்டில் வளரும் மரங்கள் எவை ?
7. காட்டு மரங்கள் எவை ?
8. கிளைகள் இல்லாத மரங்கள் எவை ?
9. மா மரம் எப்படிப் பூக்கும் ?
10. மா மரத்தின் இனங்கள் எவை ?

## (ஏ) பலாமரம்

பலா மரம் பெரியது. அதற்குக் கிளைகள் உண்டு. கிளைகளிலும், அடிமரத்திலும் பலாக்காய்கள் தொங்கும். பலாக் காய் பெரியது. அதன் மேற்பாகத்தில் தடல் உண்டு. தடலின் மேல் முட்கள் உண்டு. தடலின் உள்ளே சுளைகள் உண்டு. சுளைகளில் விதைகள் உண்டு.



பலா மரம்

பலாக்காய் கறிசமைக்க உதவும். சிலர் அதை அவித்து உண்பர். பலாப்பழம் இனிப்பாய் இருக்கும். சில பலாப்பழம் தேன்போல் இனிக்கும்.

பலா மரம் அதிக பிரயோசனம் உள்ளது. மரத்தை அரிந்து பலகை செய்வார்கள். பலகையால் மேசை, கதிரை, அலுமாரி முதலிய தளபாடங்கள் செய்வார்கள்.

பலா மரம் சிங்கள நாடுகளில் அதிகம் உண்டு. சிங்களவர் பலாமரத்தைப் பெரிதும் விரும்புவர்.

## (ஐ) நீரில் உண்டாகும் கொடிகள்

தாவரங்களில் சில கொடிகள். அவை படர்ந்து வளரும். மல்லிகை, முல்லை, மலர்க்கொடிகள். பாகல், பீர்க்கு, புடோல், பூசினி காய்கறிக் கொடிகள்.

சில கொடிகள் நீரில் உண்டாகிப் படர்வன. அவை தாமரை, செங்கழுநீர், அல்லி என்பனவாம்.

தாமரை குளத்தில் பரந்து படரும். அதில் இரண்டு இனங்கள் உண்டு. ஒன்று வெண்டாமரை, மற்றது செந்தாமரை.

தாமரை இலை வட்ட வடிவம் உள்ளது. அது நீரில் மிதந்து கிடக்கும். அதிலே நீர் ஒட்டுவதில்லை. தாமரைத் தண்டு நீளமானது. தாமரைப் பூ அழகானது. அதில் அநேக இதழ்கள் உள்ளன.

விடுகதை : *தட்டுத் தட்டாய் மல்லாந்து கிடக்கும்*
*ஒரு சொட்டுத் தண்ணீரும் ஒட்டாது கிடக்கும்.*



தாமரைப் பூ

விற்பனையாகின்றன

## இந்நூல் வரிசையிலுள்ளவை

| | | |
|---|---|---|
| மாணவர் சூழல் வாசகம் | 2–ம் வகுப்பு | ரூ. 2–25 |
| மாணவர் சூழல் வாசகம் | 3–ம் வகுப்பு | ரூ. 4–00 |
| மாணவர் சூழல் வாசகம் | 4–ம் வகுப்பு | ரூ. 4–25 |
| மாணவர் சூழல் வாசகம் | 5–ம் வகுப்பு | ரூ. 4–50 |
| மாணவர் சமூகக் கல்வி | 6–ம் வகுப்பு | ரூ. 4–50 |
| மாணவர் சமூகக் கல்வி | 7–ம் வகுப்பு | ரூ. 5–50 |
| மாணவர் சமூகக் கல்வி | 8–ம் வகுப்பு | ரூ. 4–75 |
| மாணவர் சமூகக் கல்வி மாதிரிப் பரீட்சை வினாக்கள் | 6–ம் வகுப்பு | ரூ. 2–00 |
| மாணவர் சமூகக் கல்வி மாதிரிப் பரீட்சை வினாக்கள் | 7–ம் வகுப்பு | (அச்சில்) |
| மாணவர் சமூகக் கல்வி மாதிரிப் பரீட்சை வினாக்கள் | 8–ம் வகுப்பு | ரூ. 2–00 |

ஆசிரியர் :
க. சி. குலரத்தினம்

பதிப்பாளர் :
ஶ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்